பக்கங்கள் : பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஆனி 23 ஞாயிற்றுக்கிழமை (08.07.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 22

# அரசு, புலிகளின் இப்போதைய போக்குத் தொடரின் இலங்கையில் போர் முடிவுக்கு வரவேமாட்டாது

## கண்காணிப்பு குழு எச்சரிக்கிறது இப்படி

கொழும்பு,ஜூலை8

அரசாங்கத்தினதும் தமிழீழ விடுதலைப் புலிகளினதும் இப்போதைய போக்கும் அணுகு முறையும் தொடருமானால் இலங்கையில் போருக்கு முடிவே வரமாட்டாது. அதனைப் என்றைக்கும் முடிவுக்குக் கொண்டுவர முடியாது.



தொர்பினூர் ஓமர்சன்

இவ்வாறு எச்சரித்துள்ளது போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு.

எமக்கு மீண்டும் மீண்டும் அளிக்கப்படும் வாக்குறுதிகளுக்கு மாறாக இரண்டு தரப்புகளும் போர்நிறுத்த ஒப்பந்தத்தை தொடர்ச்சியாக மீறிவருகின்றன -

ஆகையால் இலங்கையில் 30 வருடங்களாக நடைபெறும் போரை முடிவுக்குக் கொண்டுவரும் சாத்தியம் அருகிவருகிறது -

இரண்டு தரப்புகளுக்கும் இடையிலான பகைமையும் மோதல்களும் அதிகரித்தே வருகின்றன. - என்று கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் தொர்பினூர் ஓமர்சன் தெரிவித்தார்.

ஒவ்வொரு தரப்பும் அடுத்த தரப்பின் மீது குற்றம் சுமத்துகின்றன; குறை சொல்கின்றன.

இரண்டில் எந்தத் தரப்பிடமும் யுத்தநிறுத்த மீறல் குறித்து எடுத்துச் சொன்னால் - அவ்வாறு நடந்திருப்பதைச் சுட்டிக்காட்டினால் -

தாம் பதில் தாக்குதல், தங்களைப் பாதுகாப்பதற்கான தாக்குதலையே நடத்தியதாகக் கூறுகின்றனர். அடுத்த தரப்பே தாக்குதலை முன்னெடுத்ததாகவும் அதனால் தாம் பதில் தாக்குதல் நடத்த நேர்ந்ததாகவும் சொல்கின்றனர் -

இரண்டு தரப்புகளும் இந்தப் போக்கையும் அணுகு முறையையும் தொடர்ந்து கடைக்கொண்டால் - கடைப்பிடித்தால் பிரச்சினை - முடிவில்லாமல் தொடர்ந்து கொண்டே இருக்கும். எந்த விதமான முன்னேற்றத்தையும் எப்போதும் காணமுடியாது. போர் முடிவின்றித் தொடர்ந்து கொண்டே இருக்கும் - என்று ஓமர்சன் சொன்னார்.

இரண்டு தரப்புகளுக்கும் (10ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.கட்சியின் போராட்டத்தில் பங்கேற்க ஜே.வி.பி. மறுப்பு

கொழும்பு,ஜூலை 8

அரசுக்கு எதிராக இம்மாதம் 26ஆம் திகதி ஐ.தே.கட்சியின் ஏற்பாட்டில் நடைபெறவிருக்கும் போராட்டத்தில் பங்குபற்றுவதற்கு ஜே.வி.பி. மறுப்புத் தெரிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மக்கள் பிரிவின் அமைப்பாளர்களான மங்கள சமரவீரவுடன் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற சந்திப்பில் ஜே.வி.பி. இதனைத் தெரிவித்துள்ளது.

அரசுக்கு எதிரான இப்போராட்டத்தில் பங்குபற்றுமாறு மங்கள சமரவீர, ஜே.வி.பி. தலைவர்களிடம் கோரினார்.

இப்போராட்டம் ஐ.தே.கட்சிக்குச் சாதகமாக அமைகின்றது. இன்றைய நிலைக்கு ஐ.தே.கட்சியும் பொறுப்பேற்க வேண்டும் என்று கட்சியின் செயலாளர் ரில்வின் சில்வா கூறியிருந்தார். அதன் அடிப்படையில் ஐக்கிய தேசியக் கட்சி நடத்தும் போராட்டத்தில் ஜே.வி.பி. கலந்து கொள்ளமாட்டாது.

மங்கள சமரவீரவுடனான சந்திப்பில் ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க, பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ, பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா, நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸநாயக்க ஆகியோர் கலந்துகொண்டனர். (அ-1)

## அமைதி முயற்சியில் ஜேர்மன் - பிரிட்டன்?

கொழும்பு,ஜூலை 8

இலங்கை அமைதி முயற்சிகளில் பிரிட்டன், ஜேர்மனி ஆகிய நாடுகள் அனுசரணைப்பணி வழங்கும் வாய்ப்புக்கள் இருப்பதாக செய்திகள் வெளியாகி உள்ளன. எனினும் அவை ஊர்ஜிதம் செய்யப்படவோ அல்லது உறுதி செய்யப்படவோ இல்லை.

இப்போது அனுசரணைப் பணி வகிக்கும் நோர்வேக்கு எதிராக தெற்கில் வளர்ந்து வரும் எதிர்ப்பலைகளை அடுத்து இப் புதிய முயற்சி மேற்கொள்ளப்படும் வாய்ப்புகள் இருப்பதாக ராஜதந்திர வட்டாரங்களை மேற்கோள்காட்டி இணையத்தளம் ஒன்று

(10ஆம் பக்கம் பார்க்க)

## அரசுடன் பேசி நியாயமான தீர்வைப் பெறமுடியும் என்பது அசாத்தியம்

### 'விடுதலைப் புலிகள்' ஏடு வெளியிடும் கருத்து

இனவாத சித்தாந்த அரசியலை அடித்தளமாகக் கொண்ட சிங்கள அரசிடம் இருந்து தமிழ் மக்கள் ஒரு நியாயமான அரசியல் தீர்வை பேச்சு நடத்திப் பெறுவது என்பது சாத்தியமற்றதாகும்.

'விடுதலைப் புலிகள்' பத்திரிகையில் இவ்வாறு கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

சிங்கள அரசிடம் நிரந்தரமான அரசியல் சித்தாந்தம் ஒன்று உண்டு. இலங்கைத் தீவு சிங்கள பௌத்தர்களுக்கு மட்டுமே உரித்தான நிலம் என்பதே அந்தச் சித்தாந்தம். சிங்கள பௌத்தர்களைத் தவிர வேறெந்த இன மக்களுக்கும் இலங்கைத் தீவில் இடம் இல்லை என்றும் அந்த இனவாத சித்தாந்தம் கூறுகிறது.

சிங்களத்தின் எந்தக் கட்சி அல்லது எந்த தலைவர் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தாலும் இந்த இனவாத அரசியல் சித்தாந்தத்தில் மட்டும் மாற்றம் இருக்காது.

சிங்கள பௌத்த பேரினவாத சித்தாந்தத்தின் முதலாவது எதிரியாக தமிழினமே உள்ளது. தமிழ் மக்களும் அவர்களின் தயாக நிலமும் அதன் பேரினவாதத்தின் தொடர்ச்சியானதும் கொடூரமான தாக்குதல்களுக்கு இடைவிடாது முகம்கொடுக்க நேருகிறது. தமிழின அழிப்பு என்பது அதன் தாரக மந்திரமாக இருந்து வருகிறது.

**பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்ற போர்வையில் இனச்சுத்திகரிப்பு**

முன்னர் இனக்கலவரங்கள் என்ற பெயர்களில் காலத்துக்கு காலம் தமிழின அழிப்பைச் செய்து வந்தார்கள். இப்போது பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்ற போர்வையில் இன அழிப்பை செய்து வருகின்றனர்.

முன்னர் விவசாய அபிவிருத்தித் திட்டம் என்ற போர்வையில் தமிழர் நிலங்களை அபகரித்து சிங்களவர்களைக் குடியமர்த்தினார்கள் -

இப்போது இராணுவ உயர் பாதுகாப்பு வலயங்கள் மற்றும் பொருளாதார வலயங்கள் எனக் கூறிக்கொண்டு தமிழ் மக்களை குடியெழுப்பி கலைத்து நிலப்பறிப்பை செய்ய முனைகின்றனர் -

உள்நாட்டில் அகதிகளாக மாறி லட்சக்கணக்கான தமிழ் மக்கள் அல்லலுறுவதற்கு சிங்கள அரசின் இனவாத சித்தாந்தமே காரணம்.

கொழும்பு நகரில் இருந்து தமிழ் மக்களை வெளியேற்ற சிங்கள அரசு எடுத்த இனச் சுத்திகரிப்பு நடவடிக்கையும் அதன் இனவாத சித்தாந்தத்தின் நடைமுறை வடிவமாகும்.

சிங்கள அரசு மீது அல்லது அதன் நிர்வாக (10ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் அரசு தேர்தல்களை நடத்தினால் வன்முறைகள் வெடிக்கும் நிலை உருவாகும்

### மட்டக்களப்பு ஆயர் சுவாம்பிள்ளை சொல்கிறார்

மட்டக்களப்பு,ஜூலை 8

கிழக்கில் தற்போது நிலவும் பாதுகாப்பு நிலைமை தேர்தல் நடத்துவதற்கு உகந்ததாக இல்லை. அதனைப் பொருட்படுத்தாது அரசாங்கம் தேர்தல் ஒன்றை இங்கு நடத்துமானால் வன்முறைகள் வெடிக்கும்.

தற்போதைய சூழ்நிலையில் - இங்குள்ள நிலைமைகளால் - நியாயமான நீதியான தேர்தல்கள் நடைபெறாது.

இவ்வாறு மட்டக்களப்பு - திருகோணமலை ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

பி.பி.ஸியின் சிங்கள சேவையான 'சந்தேசிய' வுக்கு வழங்கிய செவ்வி ஒன்றிலேயே ஆயர் மேற்கண்டவாறு கூறினார்.

அந்தச் செவ்வியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

கிழக்கில் நிலைமை சற்றுப் பரவாயில்லை. ஆனால் பிரச்சினைகள் இன்னமும் உள்ளன. கிழக்கின் பெரும்பகுதி இராணுவத்தின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டுள்ளன. ஆனால் மட்டக்களப்பின் மேற்குப் பகுதியில் தொடர்ந்தும் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் மோதல் நடைபெற்று வருகின்றன.

அரசாங்கம் கிழக்கில் தேர்தலை நடத்தினாலும் வன்முறைகள் நிகழாது எனக்கூற முடியாது. தேர்தல் நடத்துவது என்பது புத்திப்பூர்வமானதல்ல.

(10ஆம் பக்கம் பார்க்க)

## தொப்பிகல நோக்கி நேற்று இடைவிடாது ஷெல் தாக்குதல்கள்

மட்டக்களப்பு,ஜூலை 8

தொப்பிகல(குடும்பிமலை) நோக்கி மட்டக்களப்பு, வாழைச்சேனை ஆகிய பகுதிகளில் இருந்து நேற்று ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

நேற்றுக்காலை முதல் இரவுவரை இத்தாக்குதல்கள் இடைவிடாமல் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன.

இத்தாக்குதல்களால் மட்டக்களப்பு, வாழைச்சேனை பகுதிகள் அதிர்ந்தவண்ணம் இருந்தன எனத் தகவல்கள் தெரிவித்தன.

விமானப்படையினரின் விமானங்களும் அந்தப் பகுதியை வட்டமிட்டு தாக்குதல்களை நேற்று மேற்கொண்டன.

தொப்பிகல பிரதேசத்தில் மோதல்கள் தீவிரமாகவும் பரவலாகவும் இடம்பெறுவதாக பிந்திய தகவல்கள் தெரிவித்தன். (அ-1)

## அரசாங்கத்துக்கு எதிராகப் போராட்டம் தொழிற்சங்கங்கள் புதனன்று கூடுகின்றன

கொழும்பு,ஜூலை 8

விலைவாசி அதிகரிப்பு, சம்பள உயர்வு போன்ற கோரிக்கைகளை முன்வைத்து வேலைநிறுத்தப் போராட்டம் ஒன்றை மேற்கொள்வது குறித்து இறுதி முடிவு எடுக்க தொழிற்சங்கங்கள் எதிர்வரும் புதன்கிழமை கூடுகின்றன.

ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் லால்காந்த இத்தகவலைத் தெரிவித்தார்.

சகலதுறைகளிலும் இயங்கும் தொழிற்சங்கங்கள் ஒன்று சேர்ந்து இந்த வேலைநிறுத்தத்தில் அரசுக்கு எதிராக குதிக்கவுள்ளதாகவும் இந்தத் தொடர் போராட்டம் பெரும்பாலும் மாத நடுப் பகுதியில் ஆரம்பமாகலாம் என்றும் அவர் தெரிவித்தார். (அ-1)

## நோர்வேத் தூதர் பிரட்ஸ்கர் சேவை முடிந்து திரும்புகிறார்

கொழும்பு,ஜூலை 8

இலங்கைக்கான நோர்வேத் தூதர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் தனது பணிக் காலத்தை முடித்துக்கொண்டு அடுத்த மாதம் ஒஸ்லோ திரும்புகிறார்.

இவர், ஒஸ்லோ திரும்புமுன்னர் புதிய தூதருடன் கிளிநொச்சி, அம்பந்தோட்டை, சிகிரியா ஆகிய பகுதிகளுக்குச் செல்வார்.

நோர்வேயின் அரசசார்பற்ற அமைப்பான 'நொறாட்' அந்தப் பகுதிகளில் மேற்கொள்ளும் அபிவிருத்திப் பணிகளை புதிய தூதருடன் பிரட்ஸ்கர் பார்வையிடுவார்.

அண்மையில் ஜனாதிபதியை பிரட்ஸ்கர் சந்தித்து கலந்துரையாடினார்.

விசேட சமாதானத் தூதர் (10ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இ.சு. முரளிதரன் எழுதிய 'நுங்கு விழிகள்' கவிதை நூல் வெளியீட்டு விழா அண்மையில் நெல்லை முருகன் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. நூலின் முதற்பிரதியை கு.பாலகிருஷ்ணன் பெறுகிறார். நடுவே நூலாசிரியர் காணப்படுகிறார்.

எழுத்தாளர் தெனியான் வெளியீட்டுரை நிகழத்துவதையும் மேடையில் குப்பிளான் ஐ. சண்முகன், விழாத் தலைவர் எஸ். நடராசா, கவிஞர் சோ. பத்மநாதன் ஆகியோர் மேடையில் வீற்றிருப்பதையும் இரண்டாவது படத்தில் காணலாம்.

# 'மிஹின் எயார்' விமான சேவைக்கு கூட்டுத்தாபனம் கடனாக எரிபொருள்!

## நாடாளுமன்றில் ஜே.வி.பி. தகவல்

''மிஹின் எயார்'' விமான சேவைக்கு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஐந்து கோடி ரூபா பெறுமதியான எரிபொருளை கடனாக வழங்கியுள்ளது என்று ஜே.வி.பி. நேற்று நாடாளுமன்றத்தில் குற்றஞ்சாட்டியது.

இவ்வாறு எரிபொருளை கடனாக வழங்குவதன் மூலம் மீண்டும் எரிபொருள் களின் விலை அதிகரிக்கும் என்று அக்கட்சி எச்சரித்துள்ளது.

ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸ்ஸநாயக்க இது தொடர்பாக கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் கூறியதாவது:-

மிஹின் எயார் விமான சேவை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் இருந்து எரிபொருளைக் கொள்வனவு செய்வதற்காக இரண்டு கோடி ரூபாவை வங்கிப்பிணையாக வைத்துள்ளது.

ஆனால், அந்நிறுவனம் 5 கோடி ரூபா பெறுமதியான எரிபொருளை இப்போது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திலிருந்து கடனாகப் பெற்றுள்ளது.

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட மிஹின் எயாருக்கு கடன் அடிப்படையில் எரிபொருள் வழங்கியமை பெருந்தவறாகும்.

நஷ்டமடைந்த நிறுவனங்களில் ஒன்றாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் உள்ளது. அவ்வாறான ஒரு நிறுவனம் ஒரு புதிய நிறுவனத்திற்கு எவ்வாறு கடன் அடிப்படையில் எரிபொருளை வழங்க முடியும்?

இந்த நிலைமைகள் காரணமாக மீண்டும் எரிபொருள்களின் விலையை உயர்த்த வேண்டிய நிலை ஏற்படும். ஆகவே, மிஹின் எயாருக்கு எரிபொருளைக் கடனாக வழங்குவது நிறுத்தப்பட வேண்டும் - என்றார். (சி)


## அழைப்புக் கட்டளை

இல. 16 பிரிவு 55 (1)

யாழ்ப்பாணம் என்னுமிடத்திலுள்ள / மாவட்ட நீதிமன்றத்தில்

தவக்குமார் பெண் சாந்தினி
(தம்பிராசா மகள்)
குழுக்கண்டி லேன்,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

வழக்கு இல. மண நீக்கம்/ 779 எதிர் — வழக்காளி

முருகேசு தவக்குமார் மு. யசோக்குமார்
மேற்பாத்து
சிறுவர் பாடசாலை அருகில்,
பாலமைக்கல், நெடுக்குளம்,
வவுனியா.

எதிராளி

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள எதிராளிக்கு
மேலே பெயர் குறிப்பிட்டுள்ள வழக்காளி

உம்மிடம் இருந்து மண நீக்கம் கோரி

இந் நீதிமன்றத்தில் உமக்கெதிராக, வழக்குத் தொடர்ந்துள்ளாராதலினால் அதற்கு உமது மறுமொழி ஏதேனும் இருப்பின், 2007 ஆம் ஆண்டு (07) ஆடி மாதம் 26ஆந் நாளன்று, அல்லது அதன் முன்னர் நீதிமன்றில் கோப்பிடும்படி இத்தால் நீவிர் தேவைப்படுத்தப்படுவதோடு சொல்லப்பட்ட தேதியன்று அல்லது அதன் முன்னர் நீவிர் மறுமொழி கோப்பிடத் தவறும் சந்தர்ப்பத்தில் வழக்கானது மறுகட்சிக்காரர் இல்லாமலே மேற்கொண்டு நடத்தப்பட்டு, விளங்கப்படுமென அறிந்து கொளுமாறு நீவிர் இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

பதிவு பெற்ற தரணி மூலம் நீர் தோன்றாவிடில், சட்ட முறையான எல்லா அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப் படக்கூடிய முகவரியொன்றைக் கூறும் விபரக் குறிப்பொன்றைக் கோப்பிடுமாறு நீவிர் மேலும் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி
து.சிறீமோகன்
பதிவாளர்.
மாவட்ட நீதிமன்றம்.

குறிப்பு: விளக்கத் தேதியை நிர்ணயிப்பதற்காக பகிரங்க நீதிமன்றத்தில் இவ்வழக்கு கூப்பிடும் திகதி பற்றிய அறிவித்தலை நீவிர் பெறவிரும்பினால் பதிவு செய்யப்பட்ட முகவரியொன்றை இந் நீதிமன்றப் பதிவாளரிடம் கொடுத்துதவுமாறும் பதிவஞ்சல் மூலம் அனுப்பி வைப்பதற்கும் செலவை மேவுவதற்குத் தேவைப்படும் முத்திரைகளைக் கொடுக்குமாறும், 80ஆம் பிரிவின் மூலம் நீவிர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

து.சிறீமோகன்.-
கையொப்பம், பதிவாளர்.

2007 ஆண்டு ஆடி மாதம் 02 ஆம் நாளாகிய இன்று
வரைவு கி. வீரகத்திப்பிள்ளை
வழக்காளி சட்டத்தரணி.

(சி-52864)


## கசிப்பு வைத்திருந்த தம்பதியருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஜூலை 8

சாவகச்சேரி சப்பச்சிமாவடிப் பகுதியில் சட்ட விரோத கசிப்பு வைத்திருந்த தம்பதியினர் மதுவரித் திணைகள உத்தியோகத்தர்களிடம் வசமாக மாட்டிக் கொண்டனர்.

இந்த இருவருக்கும் எதிரான வழக்குகள் நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் நடைபெற்றன. வழக்கினை விசாரித்து நீதிவான் இருவரையும் கடும் எச்சரிக்கை செய்ததுடன் இரு வருக்கும் தலா 18 ஆயிரம் ரூபா வீதம் (36 ஆயிரம்) அபராதம் விதித்தார்.

அத்துடன் தலா 10 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் தலா 10 ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு ஆட்பிணையிலும் செல்ல அனுமதித்தார்.

மேலும் பிணை நிபந்தனை நிறை வேற்றப்பட்ட தினத்திலிருந்து இரண்டு வருடகால நன்னடத்தை காலமாக குறிப்பிட்டதுடன் இனி வரும் காலங்களில் எக்காரணம் கொண்டும் சட்ட விரோத கசிப்பு உற்பத்தி, வைத்திருப்பது, விற்பனை, கடத்தல் ஆகியவற்றில் ஈடுபடக்கூடாது எனவும், நீதிமன்றின் மறு கட்டளை வரை தினமும் காலை 9 மணிக்கும் 11 மணிக்குமிடையிலும் பி.ப. ஒரு மணிக்கும் 3 மணிக்கும் இடையிலும் தினமும் இரு தடவைகள் நீதிமன்றில் கையொப்பமிட வேண்டுமெனவும் உத்தரவிட்டார். (1-207)


## மரண அறிவித்தல்

### திருமதி விமலாதேவி சிவானந்தன்



புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும் கனடாவில் வசித்து வந்தவருமான திருமதி விமலாதேவி சிவானந்தன் 04.07.2007 புதன்கிழமை காலமானார்.

அன்னார் புலவர் ஈழத்துச் சிவானந்தனின் அன்பு மனைவியும் நவரெத்தினம் - புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும் கணபதிப்பிள்ளை - செல்லம்மா தம்பதியரின் மருமகளும் சிவராமலிங்கத்தின் (யா/ இந்துக் கல்லூரி முன்னாள் பிரதி அதிபர்) அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் கனடாவில் நாளை (09.07.2007) திங்கட்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*7/1, புகையிரத வீதி,*
*கந்தர்மடம்.*

தகவல்:
செ. சூரியன்.


## நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 8

சமய விவகார அமைச்சு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் புண்ணிய கிராம வேலைத் திட்டத்தைச் செயற்படுத்தும் ஒருநாள் நற்பண்புச் செயலமர்வு இன்று காலை 8.30 மணிக்கு கொடிகாமம் கண்ணகை அம்மன் ஆலயத்தில் இடம்பெறவுள்ளது.

அபிவிருத்தி உதவியாளர் சீ. மகிந்தினி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சிப் பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன் கலந்துகொள்வார். (1-203)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 8

யாழ். அரசடி வீதி, ஞானக்குழந்தை இல்ல பாலர்பாடசாலையின் விளையாட்டு விழா இன்று காலை 9 மணிக்கு யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

பொறுப்பாசிரியர் திருமதி கேதாரபூரணி ஞானகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி கி. விசாகரூபன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (203)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 8

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையின் முதன்மைநிலை ஒன்றுக்கான விளையாட்டுப் போட்டிகள் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளன.

அதிபர் வே. ஞானகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் ஓய்வுபெற்ற ஆசிரியர் திருமதி யோ. பத்மநாதன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்வார்.(203-224)

* * *

வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் வடக்கு வீதியில் அமைந்துள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் வாராந்த ஆன்மீக நிகழ்வில் இன்று ஞாயிற்றுக்கிழமை ''நாராயணனின் மகிமை'' என்னும் தலைப்பில் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது. சொற்பொழிவினை கரவெட்டி ஞானசாரியார் கல்லூரி மாணவன் த. தவனேசன் நிகழ்த்தவுள்ளார். (1-78)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 8

நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயம் மீதான தாக்குதலின் 12ஆம் ஆண்டு நினைவு தினம் நாளை திங்கட்கிழமை நினைவு கூரப்படவுள்ளது.

09.07.1995 இல் 'லீப் போர்வேர்ட்'' இராணுவ நடவடிக்கை மூலம் மேற்கொள்ளப்பட்ட விமான தாக்குதலில் 147 பேர் பலியானதும்-

360க்கும் மேற்பட்டோர் கை, கால் இழந்து படுகாயமடைந்து பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய நாளாகும்.

மேற்படி விமானத் தாக்குதலில் இடம்பெயர்ந்து கொண்டிருந்த மக்கள் மீது தொடர்ச்சியாக 13 குண்டுகள் வீசப்பட்டன.

இக் கோரத் தாக்குதலில் நவாலி சின்னக்கதிர்காம முருகன் ஆலயம், நவாலி சென். பீற்றர் தேவாலயம், 80 க்கும் மேற்பட்ட வீடுகள், 6 கடைகள் என்பன முற்றாக அழிவடைந்தன.

மேற்படி தினத்தையொட்டி நாவலி சின்னக் கதிர்காம முருகன் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடு நடத்தப்படவுள்ளதாக ஆலய பிரதம குழு சிவத்திரு மா. பத்மநாதன் தெரிவித்தார்.

இதேவேளை-

நவாலி சென். பீற்றர்ஸ் ஆலயத்திலும் அன்றைய தினம் பூசை வழிபாடு இடம்பெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (95)

* * *

அச்சவேலி, ஜூலை 8

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையில் எதிர்வரும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடமாடும் மருத்துவ முகாம் நடத்தப்படவுள்ளது.

பொதுமக்களை தேடிச் சென்று சிகிச்சை அளிக்கும் செயற்றிட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் கிராமிய வைத்திய நிலையங்கள் தோறும் மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

அச்சுவேலியில் நடத்தப்படும் முகாமில் மகப்பேற்று மருத்துவம், பொது மருத்துவம் பெண்ணியல் மருத்துவம், தோல்நோய், சத்திரகிகிச்சை மருத்துவம், மார்புநோய் மருத்துவம் உள்ளிட்ட பல மருத்துவத் துறையையும் சேர்ந்த வைத்திய நிபுணர்கள் கலந்து கொண்டு சிகிச்சை அளித்து வைத்திய ஆலோசனைகளை வழங்கவுள்ளனர். (202-111)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 8

புத்தூர் சோமஸ்கந்தன் சனசமூக நிலையத்தினர் நடத்தும் மாபெரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதிநாள் நிகழ்வுகள் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு புத்தூர் சிவன் கோயில் மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

சி. கோபிகிருஷ்ணா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சமூக அபிவிருத்தி மன்றத் தலைவி திருமதி நவநீதம் ஜெகதீசன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (203)


## உடன் விற்பனைக்கு

*192, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் பெருமாள் கோயில் சந்திக்கும், பிறவுண் வீதி சந்திக்கும் இடையில் 2 1/2 பரப்புக் காணியில் 60 அடி நீளம் 40 அடி அகலம் கொண்ட வீடு உடன் விற்பனைக்குண்டு.*

தொடர்பு :தேவன்
**192, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**
**பார்வையிடும் நேரம்:**
**காலை 9-12 மணி ,மாலை 3-5 மணி.**
**தொ.பே. 0774146219.** (62511)



## மரண அறிவித்தல்கள்

### திருமதி பரமசாமி சேதுப்பிள்ளை



அரியாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் 402, நாவலர் வீதி, அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட பரமசாமி சேதுப்பிள்ளை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் பரமசாமியின் அன்பு மனைவியும் பரமேஸ்வரி, இராசலட்சுமி, கணேசலிங்கம் (இ.மி.ச.) ஸ்ரீலட்சுமி, கங்காதேவி, சொர்ணலிங்கம் (இ.மி.ச.), அன்னலிங்கம் (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தாயும் சண்முகலிங்கம், காலஞ்சென்ற துரைசிங்கம், இந்திராணி, அருணாசலம், ராசதுரை, ரேணுகா, றமணி (நோர்வே) ஆகியோரின் பாசமிகு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.07.2007) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*402, நாவலர் வீதி,*
*அரியாலை.* (62538)

தகவல்:
குடும்பத்தினர்.

### பொன்னுத்துரை பாலச்சந்திரா

இல. 91/17, இந்து மகளிர் கல்லூரி ஒழுங்கை, கந்தர்டம், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பாலச்சந்திரா 06.07.2007 வெள்ளிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை - பாலாம்பிகை தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், பராசக்தியின் (யாழ். போதனா வைத்தியசாலை ஓய்வுபெற்ற தாதி) அன்புக் கணவரும், மிருணாலினி, உஜ்ஜஜினியின் பாசமிகு தந்தையும், ரவியின் மாமனும் ஆதித்யனின் அன்பு பேரனும் உமாபதி, சிவநாயகி, கமலாதேவி, கணேசன், புனிதவதி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் லக்சுமி அம்மா (பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை), தர்மபூபதி ஆகியோரின் பாசமிகு மைத்துனருமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கனடா தொடர்புகளுக்கு:*
*011 416 385 1728* (சி- 52865)

தகவல்:
குடும்பத்தினர்
0773867377 (மருமகன்),
கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கிலிருந்து தமிழர்களை விரட்டுவதற்கு சிங்கள அரசுகள் செய்த சூழ்ச்சிகளில் முதன்மையானது குடியேற்றத்திட்டம்

இலங்கையில் மாறி மாறி ஆட்சி அமைத்து வரும் அரசாங்கங்கள் மேற்கொண்டு வந்த தமிழ் இனச் சுத்திகரிப்பு நடிவடிக்கையின் உச்சக் கட்டமே வடக்கு - கிழக்குப் பிரிப்பு. சிங்களக் குடியேற்றங்களை உருவாக்குவதன் மூலம் தாயகப் பிரதேசம், பூர்வீக நிலம் பெரும்பான்மையாக வாழும் பிரதேசம் போன்ற வாதங்களை இல்லாமல் செய்து இலங்கையை சிங்கள மயமாக்குவதே இலங்கையை ஆட்சி செய்து வரும் இரு பிரதான கட்சிகளினதும் நோக்கம்.

தங்களுக்குள் ஆயிரம்தான் பிளவுகள் இருந்தாலும், இந்த ஒரு விடயத்தில் மட்டும் சிங்களக் கட்சிகள் அனைத்தும் ''நீ பத்தடி பாய்ந்தால் நான் இருபதடி பாய்கிறேன்'' என்று போட்டி போட்டுச் செயற்பட்டு வருகின்றன. இடதுசாரிகளும் இதற்கு விதிவிலக்கல்லர். தமிழர்களின் சனத்தொகையைக் குறைப்பதன் மூலம் அதிகாரப் பகிர்வு மேற்கொள்ளப்படும்போது அதிகார எல்லையைக் குறுக்குவதுடன் தமது ஆதிக்க எல்லையை விஸ்தரிப்பதே குடியேற்றத் திட்டங்களின் நோக்கம்.

கிழக்கு மாகாணத்திலிருந்து தமிழர்களை விரட்டுவதற்காக ஆரம்பம் முதலே திட்டமிட்டுச் செயற்பட்டு வந்த இலங்கை அரசாங்கங்களில் இன்றைய அரசு அந்த நோக்கத்தை நிறைவேற்றிவிட்டது. கிழக்கு மாகாணத்திலிருந்து தமிழர்களை விரட்டுவதை இரு வழிகளில் அரசாங்கம் நடைமுறைப்படுத்தியது. ஒன்று சிங்களக் குடியேற்றங்களை உருவாக்குவது. மற்றையது கலவரங்களை உருவாக்கித் தமிழர்களை வெளியேற்றுவது.

கிழக்கில் மட்டுமல்ல, வடக்கிலும் குடியேற்றத் திட்டங்களை உருவாக்கி வடக்கையும் சிங்கள மயப்படுத்தும் நோக்கத்துடனேயே இலங்கை அரசுகள் செயற்பட்டு வந்தன. எனினும் காலத்திற்குக்காலம் இடம்பெற்ற போராட்

## தமிழர்களைத் தமிழர்களே வெளியேற்றிய கைங்கரியமும் கபளீகரத்துக்குக் கை கொடுத்தது

டங்களால் வடக்குத் தப்பியது. ஆனால், கிழக்கு (அனேகமாக) பறிபோய்விட்டது.

**பாவற்குளத்தில் முதலாவது சிங்களக் குடியேற்றம்**

இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட முதலாவது குடியேற்றத்திட்டம் வவுனியாவில் மேற்கொள்ளப்பட்ட பாவற்குளம் குடியேற்றத் திட்டம். 1936ஆம் ஆண்டு பாவற்குளம் குடியேற்றத்திட்டம் உருவானது. பாவற்குளம் இன்று பதவியாவாக மாறிவிட்டது. அடங்காத் தமிழன் என அழைக்கப்பட்ட செ. சுந்தரலிங்கம் மேற்கொண்ட சில ஆயுதம் தாங்கிய எதிர்ப்பு நடவடிக்கைகளால் பதவியாக் குடியேற்றத் திட்டம் விஸ்தரிக்கப்படவில்லை.

கிழக்கை சிங்கள மயப்படுத்துவதில் அரசாங்கம் வெற்றி ஈட்டியுள்ளது. இலங்கை சுதந்

## தொடக்கம் பாவற்குளம்; முடிவோ இன்னும் இல்லை...!

திரமடைந்தபோது மேற்கொள்ளப்பட்ட முதலாவது குடியேற்றத் திட்டம் கந்தளாய் குடியேற்றத் திட்டம். தமிழர்களின் பாரம்பரியப் பிரதேசமான கந்தளாய் இன்று ''கந்தலே''யாக மாறிவிட்டது. குடியேற்றத் திட்டத்தின் மூலம் சிங்களவர்களைக் குடியமர்த்திய பின்னர் காலத்திற்குக் காலம் மேற்கொள்ளப்பட்ட கலவரங்களின் போது தமிழர்களை விரட்டியடிக்கும் நடவடிக்கையையும் சிங்கள அரசியல்வாதிகள் மேற்கொண்டு வந்தனர். இன்று கந்தளாயில் மருந்துக்கும் தமிழன் இல்லை.

கந்தளாயிலிருந்து அச்சம் காரணமாக வெளியேறி யாழ்ப்பாணத்தில் வசித்து வந்த கந்தளாய் வாசியொருவர் 2002ஆம் ஆண்டு யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தானவுடன் மீண்டும் கந்தளாய்க்குச் சென்று நெல் விதைக்கவும் பிள்ளையார் கோயிலைப் புனரமைக்கவும் முற்பட்டார்.

ஒருநாள் இரவு மேற்படி நபரின் இல்லத்துக்குச் சென்ற துப்பாக்கிதாரிகள் அவரை அழைத்து வீட்டு வாசலில் வைத்துச் சுட்டு விட்டுச் சென்று விட்டனர். கந்தாளாய் குடியேற்றதிட்டத்திற்கு அடுத்ததாக மேற்கொள்ளப்பட்ட பெரும் குடியேற்றத்திட்டம் கல்லோயா. குடியேற்றத் திட்டம் கல்லோயா 1949 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. கல்லோயாத் திட்டத்தின் மூலம் நாற்பது சிங்களக் கிராமங்கள் உருவாக்கப்பட்டன.

இந்தக் கல்லோயா குடியேற்றத் திட்டமே இன்று திகாமடுல்ல என அழைக்கப்படுகிறது. இப்போது இது ஒரு தேர்தல் தொகுதியும் ஆகிவிட்டது.

இப்பிரதேசத்தின் சனத்தொகை பின்வருமாறு:

| ஆண்டு | சிங்களவர் | தமிழர் | முஸ்லிம்கள் |
|---|---|---|---|
| 1932 | 31,174 | 1,30,381 | 1,06,706 |
| 1989 | 2,72,980 | 1,18,850 | 2,41,952 |

**திருகோணமலை மீது எப்போதும் ஒரு கண்; இப்போது நிறைவேறுகிறது**

அடுத்தபடியாக அரசாங்கம் கவனம் செலுத்திய இடம் திருமலை. திருமலையை சிங்கள மயப்படுத்துவதில் சுதந்திரமடைந்த காலந்தொட்டு அக்கறை செலுத்தி வந்த அரசாங்கம் இன்று தனது எண்ணத்தைப் பெருமளவில் நிறைவேற்றிவிட்டது.

இதற்குச் சிறந்த உதாரணம். இலங்கை சுதந்திரமடைந்த காலந்தொட்டு இன்றுவரை ஒரு தமிழர் கூட திருமலைக்கு அரசாங்க அதிபராக நியமிக்கப்படவில்லை. சம்பந்தனுக்கு காணி வழங்க மறுத்த திருமலை அரச அதிபர் பண்டாரகொட சேருவில விகாராதிபதிக்கு 2000 ஏக்கர் காணியை நன்கொடையாக வழங் கினார்.

அடுத்து திருமலையின் சனத்தொகையைப் பார்ப்போம்.

| ஆண்டு | சிங்களவர் | தமிழர் |
|---|---|---|
| 1948 | 20% | 44% |
| 1981 | 33% | 36% |

இன்று திருமலையில் ஒரு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரைத் தெரிவு செய்வதே பெரும் சிரமமாக உள்ளது

இலங்கை-இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு வடக்கு - கிழக்கு மாகாண சபை உருவாக்கப்பட்டபோதும் திருமலையைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கவே இலங்கை அரசாங்கம் விரும்பியது.

தமிழர்கள் தமது சொந்த இடங்களில் இருந்து விரட்டியடிக்குப்படுவதற்கும் தமிழர்களின் சனத்தொகை விகிதாசாரம் குறைவதற்கும் முஸ்லிம்களும் கிறிஸ்தவர்களும் காரணமாக இருந்துள்ளனர். அம்பாறையிலிருந்து தமிழர்கள் வெளியேற்றப்பட்டமைக்கு முஸ்லிம்களும் உடந்தையாக இருந்துள்ளனர்.

1990ஆம் ஆண்டிற்குப் பின்னர் கிழக்கு மாகாணத்தில் படையினர் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கை காரணமாக, அச்சம் காரணமாகத் தமது நிலங்களை விட்டு வெளியேறிய தமிழர்களின் நிலங்கள் முஸ்லிம்களுக்குச் சொந்தமாக்கப்பட்டன.

உதாரணம், மட்டக்களப்பிலிருந்து மீனா வெட்டை என்ற தமிழ்க் கிராமம் தற்போது இஸ்லாமாபாத் குடியிருப்பாக மாறியுள்ளது.

சிலாபத்தில் வாழ்ந்த தமிழ் கிறிஸ்தவர்களில் சிலர் ஒரு பாதிரியாரின் தலைமையில் சிங்களவர்களாக மாற்றப்பட்டுள்ளனர். இவர்கள் சிங்களவர்களாக மாற்றப்பட்டுள்ள போதும் இவர்களுக்கிடையில் ஏதாவது சண்டை, சச்சரவு ஏற்பட்டால் வாயில் வருவது தமிழ்த் தூசண வார்த்தைகள்தான்! இதை யாழ்ப்பாணத்தவர்கள் சிலர் நேரடியாகக் கண்டுள்ளனர். சிலாபம் வடக்கு - கிழக்கினுள் அடங்காவிட்டாலும் இலங்கையின் மொத்த

ந.பரமேஸ்வரன்

சனத்தொகையைப் பார்க்கும்போது விகிதாசாரத்தில் பாதிப்பை ஏற்படுத்தவே செய்யும்

**வடக்கு - கிழக்கைப் பிரிப்பதற்கு ஜே.ஆர் உருவாக்கிய வெலிஓயாத் திட்டம்**

அடுத்ததாக வடக்கையும் கிழக்கையும் பிரிக்கும் நோக்கில் ஜே.ஆரின் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்டதே வெலிஓயா குடியேற்றத் திட்டம். மணலாறு, கொக்கிளாய், நாயாறு போன்ற தமிழ் கிராமங்கள் வெலிஓயாவாக மாற்றப்பட்டன.

(9ஆம் பக்கம் பார்க்க)

# உங்கள் இராசிக்கு இந்த வாரத்துப் பலன்

(08.07.2007 - 14.07.2007 வரையுள்ள)

சோதிடர் சண்

## மேடம்

சூரியனுக்கு உச்சபீடமான மேடராசியில் பிறந்த உங்களுக்கு இந்தவாரம் செவ்வாய் ஆதிக்கம்பெற்ற பலன்தரும் வாரமாகும். மேலும் உங்கள் ராசிக்கு சனி 4இல் இருப்பதுடன் குரு 8இல் இருந்தாலும் எந்தக்காரியத்தையும் எதிர் நீச்சலடித்து வெல்லுவீர்கள்.

மேலும் பூமி, வீடு, சொத்து, பணம், பொருள் என்பவற்றை வாதாடிப்பெறும் வாரமாகும். சனியைக் குருபார்ப்பதால் வாரத்தின் இறுதிநாள் வெற்றியைத் தரும். மாணவர்களுக்கு கல் விக்கு நற்பலனும் தொழிலாளர், உத்தியோகஸ்தர்களுக்கு சமபலனும் உண்டு.

## இடபம்

சந்திரனுக்கு உச்சவீடான இடபராசியில் பிறந்த உங்களுக்கு இந்தவாரம் இராசி அதிபதி சுக்கிரன் சனியுடன் இருப்பதாலும் குரு பார்ப்பதாலும் சகோதரவகை தோன்றி மறையும், பணவருவாயும், குடும்பச்சிறப்பு முண்டு. திருமணம் ஆகாதவர்களுக்குத் திருமணம் கைகூடவும் மங்களகரமான சம்பவங்கள் குடும்பத்தில் நடக்கவும் நற்பலன் உண்டு.

மேலும் குடும்பஸ்தர்களுக்கு குரு சந்திரயோகமான பலன்தந்தாலும் தொழிலாளர், உத்தியோகஸ்தர்களுக்கு வேலையாள்களால் உபத்திரம் வந்து தீரும். எது எப்படியாயினும் இவ்வாரம் இனிமை தரும் வாரமாகும்.

## மிதுனம்

விஷ்ணுவுக்கு அதிதேவதையான காத்தல் தொழிலுக்குப் பொறுப்பான புதன் கிரகத்தின் ஆட்சிபீடமான மிதுன ராசியில் பிறந்த உங்களுக்கு இந்த வாரம் சந்திரனும் சூரியனும் சேர்ந்திருக்கும் மிதுனராசிப் பலனைச் சொல்வதானால் சமபலன் தரக்கூடிய வாரமாகும். 2இல் சனியும், 6இல் குருவும் இருப்பதாலும் ஏழரைக் கடைக்கூறு நடப்பதாலும் எதிர்நீச்சல் தரும் வாரமாகும்.

பணவரவு, தொழில் நிலை மட்டுப்படுத்தப்பட்ட பலனைத் தருவதுடன் சிலருக்கு பெற்றோரால் கவலையும், கடனும், வேண்டப் படாத பிரச்சினைகளும் வந்து சேரும். விஷ்ணு வணக்கம் வினை நீக்கும்.

## கடகம்

சந்திரனை அதிதேவதையாகக் கொண்ட கடகராசியில் பிறந்த உங்களுக்கு இந்தவாரம் ஏழரை நடுக்கூறாகவும் 5இல் குருவும் நின்று பலனைத் தரும். கெஞ்சினாலும் இல்லா. வாகனம், கல்வி இப்படியானவற்றால் கிடைக்கக் கூடிய சிறப்பான பலன்தரும் காலமாகும்.

மேலும் குடும்பஸ்தர்களுக்கு புத்திரரால் சிறப்புண்டு. மாணவர்களுக்கு கல்வியால் நற்பலனும் பெறுபேற்று நன்மைகளும், உத்தியோகஸ்தர்களுக்கு உத்தியோகஉயர்வு அல் லது மேலதிகாரிகளின் பாராட்டும் நற்பலனும் உண்டு. பொதுவாக குரு பார்வையால் குடும் பச் சிறப்பும் நற்பலனும் உண்டு.

## சிங்கம்

சூரிய பகவானுடைய ஆட்சி பீடமான சிங்க ராசியில் பிறந்த உங்களுக்கு-

உங்கள் ராசியில் ஞானகாரகன் கேது இருப்பதுடன் 4இல் குரு இருப்பதாகவும் கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லை என்ற மாதிரி நற்பலன்கள் நழுவியபோதும் சிலருக்கு பிரயாணத்தடை, தலைவருத்தம் மற்றும் பணச் செலவு என்பன தரக்கூடிய வாரமாகும்.

முக்கியமாக, பணவிரயத்திற்குரிய வார மாக இருப்பதால் தொழிலாளர்கள், உத்தியோகத்தஸ்தர்கள் முதலீடு செய்வதைத் தவிர்க்கவும். குடும்பஸ்தர்கள் நிதானமாக பணவிடயத்தில் நடந்து கொள்ளவேண்டும். வெளிநாடு போன்ற பிரயாண விடயமாக ஏமாற்றம் தரக் கூடியபலன் இருப்பதால் நிதானத்தைக் கடைப்பிடிக்கவேண்டும்.

## கன்னி

புதன் கிரகத்தின் அதிதேவதையான காத்தல் தொழிலைச்செய்யும் மகாவிஷ்ணு வின் அம்சமான புதன் கிரகத்தின் உச்சவீடான மிதுனராசியில் பிறந்த உங்களுக்கு குரு 3ஆம் வீட்டிலும் சனிபகவான் 11ஆம் வீடான கடகராசியிலும் நின்று பலன்தரும் இவ்வாரம் வருவாய்க்குரிய பலன் தரும் காலமாகும்.

வருவாய்க்கு மிஞ்சிய செலவினம் தருவதுடன் நட்டமடைதலும் ஏற்பட வாய்ப்புண்டு. மேலும் சனியைக் குரு[illegible] தலைபோற இடத்தில் தலைப்பாகை[illegible] ஏற்படக்கூடிய நட்ட நிகழ்விலிருந்து விடுபடுவீர்கள். சிலருக்கு மூத்தசகோதர பகை வந்துவிடும். மாணவர்களுக்கு கல்வி நிலை நன்றாகும்.

## துலாம்

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற நிலையிலும் தராசுபோல நிற்கக்கூடிய வெள் ளிக் கிரகத்தை ஆட்சிவீடாகக் கொண்ட துலா ராசியில் பிறந்த உங்களுக்கு 2இல் குருவும் 9இல் சனியும் நின்று பலன்தரும். இவ்வாரம் குடும்ப சுகம் தரும் வாரமாகும். மேலும் இந்த வாரம் திடீர் பணவரவு, சகோதர சுகம், தொழிலால் சிறப்பு மற்றும் வியாபாரிகளுக்கு தொழிலால் மேன்மையும் நற்பலனும் உண்டு.

மேலும் சந்திரன், செவ்வாய் ஒரு நேர்கோட்டிலிருந்து ஒன்றையொன்று நோக்குவது காதலர்களுக்கு இனிமை தரும் வாரமாகும்.

## விருச்சிகம்

முருகப்பெருமானை அதிதேவதையாகக் கொண்ட செவ்வாய் கிரகத்தின் ஆட்சிவீடான விருச்சிக ராசியில் பிறந்த உங்களுக்கு ஜென்மத்து வியாழனும் 9இல் சனியும் நிற்பதால் இந்த வாரம் பணச்செலவு, களவு கொடுத்தல், இனசன விரோதம், தொழிலால் மந்தநிலை போன்றவற்றை தந்தாலும் வார இறுதியில் இப்படியான பலன் மெல்ல மெல்ல செயலிழந்து நன்மைதரும்.

பொதுவாக இவ்வாரம் குடும்பஸ்தர்களுக்கும் மற்றும் மாணவர், உத்தியோகஸ்தர்களுக்கும் சமபலனே தரும்.

## தனுசு

குருபகவானுடைய ஆட்சிவீடான தனு ராசியில் பிறந்த பலன் உங்களுக்கு.

இவ்வாரம் 12ல் குருவும் அட்டமத்தில் சனியும் நின்றுபலன்தரும். இவ்வாரம் குரு பகவானுடைய பார்வையில் கெடுதியான பலனிலிருந்து காப்பாற்றிவிடக்கூடிய நற்பலனும் இருப்பது இந்த ராசிகளுக்கு இறைவனுடைய அனுக்கிரகமாகும்.

இதனால் இவர்களுக்கு பணம், பொருள், உடமை, சொத்து, தொழில் இப்படியானவற்றால் நல்லதுமில்லை, கெட்டதுமில்லையென்ற சம்பவமே உண்டு. முக்கியமாக இளம் வயதினர் பிரயாண விடயமாக பணத்தைச் செலவு செய்வதும் அதனால் ஏற்படக்கூடிய ஏமாற்றம் துன்ப நிலையை தவிர்ப்பதும் நற்பலனாகும்.

## மகரம்

சுறா என்னும் மீனை வடிவமாகக் கொண்ட சனிபகவானுடைய ஆட்சிவீடான சலராசியான மகரராசியில் பிறந்த உங்களுக்கு-

இந்த வாரம் 11ல் குருவும் 7ல்சனியும் நிற்பதுடன் 4ல் செவ்வாயும் ஆட்சியாக இருந்து பலன்தரும். ஆதலால் பணவருவாய் உண்டு. இது கடல் கடந்த நாட்டிலிருந்து வரக்கூடிய உதவியைக் குறிக்கும். கடல்பிரயாணம் செய்வோர்க்கும் நற்பலன் தருவதுடன் தொழிலாளர், உத்தியோகஸ்தர்களுக்கு அதிஉயர் நன்மைகள் கிடைக்கும் பலன் உண்டு.

## கும்பம்

சிறிய குடத்தை வடிவமாகக் கொண்ட சனி பகவானுடைய ஆட்சிவீடான கும்பராசியில் சந்திரன் இருக்க பிறந்த உங்களுக்கு 6 இல் சனி பகவானும் 10இல் குருவும் நின்று பலன் தரும் இந்த வாரம். எதிரிகள், சத்துரு, அல்லது வேண்டப்படாதவர்களால் வீண்வம்புகளில் மாட்டிக்கொள்ளக்கூடிய பலன் உண்டு. குடும்பஸ்தர்களுக்கு கடன் மற்றும் பணச் செலவும், தொழிலாளர், வியாபாரிகளுக்கு சமபலன் தரக்கூடிய பலனாகும். சிலருக்கு விபத்து அல்லது நோய் துன்பங்களாலும் கஷ்டங்கள் தரக்கூடிய வாரமாகும். கூடியளவு இந்த ராசிக்காரர்கள் வாகனம் ஒட்டுவதில் அவதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.

## மீனம்

வியாழ பகவானுடைய ஆட்சிவீடான மீன ராசியில் சந்திரன் இருக்கப் பிறந்த உங்களுக்கு-

இவ்வாரம் பொன்னான வாரமாகும். பணம், பொருள், வருமானம் தரும் காலமாகும். குடும்பஸ்தர்களுக்கு வருவாய் தருவதுடன் மாணவர்களுக்கு கல்விக்கு மிக்க பலனும் தரும் வாரமாகும். மேலும் வயிற்றுடன் சம்பந்தப்பட்ட சுகயீனங்களும், சிகிச்சையும் வந்துபோகும் . பாதிப்பைத் தராது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் உயர்கல்வி

**BECOME A DOCTOR**

**WORLD - CLASS EDUCATION RESEARCH WORK & HEALTH CARE**

GRODNO STATE MEDICAL UNIVERSITY - BELARUS
GOMEL STATE MEDICAL UNIVERSITY - BELARUS
VITEBSK STATE MEDICAL UNIVERSITY - BELARUS
KURSK STATE MEDICAL UNIVERSITY - RUSSIA
TVER STATE MEDICAL ACADEMY - RUSSIA
SMOLENSK STATE MEDICAL ACADEMY - RUSSIA
PEOPLES FRIENDSHIP UNIVERSITY (LUMUMBA) - RUSSIA

**உலகத்தரம் வாய்ந்த பல்கலைக்கழங்களில் மருத்துவக் கல்வியை பெற்று ஆங்கில டாக்டராகுங்கள்.**

* அதிக இலங்கை மாணவர்கள் கல்வி கற்கும் பல்கலைக்கழகம்
* உலக சுகாதார நிறுவனம் (WHO), இலங்கை மருத்துவ கவுன்சில் (SLMC), பிரித்தானிய மருத்துவ கவுன்சில் (BMC), ஐரோப்பிய ஒன்றியம் (EU) போன்ற 64 இற்கு மேற்பட்ட நாடுகளினாலும் அமைப்புகளினால் அங்கீரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள்.
* O/L மாணவர்களுக்கு - 7 வருடங்கள்
  A/L மாணவர்களுக்கு - 6 வருடங்கள்
* பட்டம் பெற்ற பின், ஆஸ்திரேலியா, அமெரிக்க இராஜ்யம், பிரித்தானியா செல்வதற்கு அறிவுரைகள், ஏற்பாடுகள்.
* விடுமுறைகளுக்கு ஐரோப்பிய நாடுகளில் வேலைவாய்ப்பு ஒழுங்குகள்!

**ரஷ்ய தூதரகத்தினால் VISA நிராகரிக்கப்பட்ட மாணவர்களுக்கு விஷேட ஒழுங்குகள்**

இம்முறை A/L எடுக்கும் மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்.
(PendingResult) A/L பரீட்சை முடிந்தவுடன் பயணம்

**Belarus (பெலாரூஸ்), Poland (போலந்து), Ukraine (உக்ரேயின்), Malasiya (மலேசியா), Singapore (சிங்கப்பூர்), Russia(ரஷ்யா) பிரபல பல்கலைக்கழகங்களில்**

மருத்துவம் (MBBS, MD), பொறியியல், கலை, வர்த்தகம், சட்டம் கணனியியல் கற்கை நெறிகள்

- 100% விசா உத்தரவாதம்.
- விண்ணப்பித்து 20 நாள்களுக்குள் பல்கலைக்கழகம் செல்லலாம்.
- வங்கி நிலுவைகள், தூதரக நேர்காணல், IELTS தேவையில்லை.
- O/L மாணவர்களுக்கு பிரத்தியேக ஏற்பாடுகள்.
- A/L புள்ளி குறைந்த மாணவர்களுக்குப் விசேட ஏற்பாடுகள்.
- பெண்களுக்கு அதிக பாதுகாப்பு, விடுதி ஏற்பாடுகள் (தாய்/ தந்தை 2-3 மாதங்கள் மாணவியுடன் தங்கியிருக்கவும் ஏற்பாடுகள்).

**Passportஐ யாழ்ப்பாணத்திலிருந்து விரைவில் பெற விஷேட ஏற்பாடுகள்**

**" July 15ஆம் திகதிவரை யாழ்.நகரில் பல்கலைக்கழக அனுமதிகள் வழங்கப்படும்"**

**IELTS குறைந்த புள்ளி எடுத்த மாணவர்களுக்கு விஷேட அறிவுரைகள் / ஏற்பாடுகள்**

**August மாதம் பயணிக்கவிருக்கும் 30இற்கும் மேற்பட்ட மாணவ மாணவியருடன் நீங்களும் இணைந்து கொள்ளுங்கள்!!!**

## OVERSEAS STUDENT PROGRAMME

**(Office of the Sri Lanka Coordinator)**

யாழ்ப்பாணம் : இல. 02, திருவள்ளுவர் ஒழுங்கை, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். தொ.பே. 0777250555, 021 222 8247
மட்டக்களப்பு : இல.01, முதலாம் குறுக்கு, பிள்ளையார் கோயில் வீதி, கல்லடி, மட்டக்களப்பு. தொ.பே. 0652224872

தொடர்புகளுக்கு:
**Dr.M.Mylashan MBBS (SL)**
**Director of Studies**
**0777250555**


## Post of General Manager CANE Jaffna

Cancer Aid for North and East (CANE) is a U.K registered charity.

The aim of CANE is to provide, palliative and medical care as well as assistance to cancer patients and their carers /relatives, in the North and East of Sri Lanka.

We are also involved in cancer prevention and diagnostic activities. **We are proposing to expand these activities.**

CANE Jaffna is currently runs an in patient Hospice for respite and terminal care for cancer sufferers. We are also involved in Mobile Hospice and Home Care activity and a Day Care Centre is to be opened soon.

We need an experienced General Manager, with managerial skills, public relations skills, basic computer skills and ability to handle complaints of staff and patients.

The Manager's work will involve the management of the hospice and field activities of CANE.

The appointment will initially be on a contract basis for one year and the total remuneration will be Rs. 25,OOO. per month for a full time post and pro-rata for part time over 5 days in a week.


Please send in your applications with CV by **30th July 2007** by registered post -

To **President. CANE Jaffna Hospice. Sabapathipillai Road. Uduvil, Chunnakam, Jaffna.** Please write, "Application for the post of General Manager" on the left hand corner of the envelope

You can also Email your applications to:canejaffna@yahoo.com

President, CANE Jaffna Hospice. (62449)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் நன்றி செலுத்தும் வழிபாடும்



அமரர்
**டானியல் ஜேம்ஸ் பொன்னுத்துரை**

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 24*08*1916 | 08*07*2006 |

*எம் வாழ்வினில்*
*என்றுமே உங்கள் நினைவுகள்*
*இறைவன் தந்த வாழ்வு*
*ஒப்பாய் வாழ்ந்து*
*வழிகாட்டினீரே*
*உங்கள் அன்பு வழி*
*உங்கள் இறை நெறி*
*தொடர்வோம் என்றும்*
*உங்கள் எண்ணத்தோடு.*


வரணி மத்தி,
வரணி. (62476)

**குடும்பத்தினர்.**

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

*புறொயிலர் கோழி விற்பனைக்கு உண்டு. வேண்டிய அளவுகளில் பெற்றுக்கொள்ளலாம்.*
*தொடர்பு:-* கோல்டன் பாம், 77, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
மந்திகை (மிருகவைத்தியசாலை முன்பாக), பருத்தித்துறை.

## கண்ணீர் அஞ்சலி



எமது லயன்ஸ்கழக அங்கத்தவர்
லயன் **அமிர்தலிங்கம் சிவகுமார்** (J.P.)
(கௌரி இல்லம் , வதிரி)
அவர்களின் மறைவையிட்டு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(சி/52858) **வடமராட்சி லயன்ஸ் கழகம்.**

## விற்பனைக்கு

புதிதாக அமைக்கப்பட்ட 6 அடி டீ பிறிஜ் விற்பனைக்குண்டு.
தொடர்பு:
பிள்ளையார் மில்,
202, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(62519)

## விற்பனைக்குண்டு

யாழ்.பல்கலைக் கழக விரிவுரையாளரின் பாவனையிலிருந்த Lap top கொம்பியூட்டர் விற்பனைக்குண்டு.
யோகி BEAUTY PARLOUR,
75, அம்மன் வீதி,
நல்லூர்.
தொடர்பு:
021 222 2796
0773 790791
(62527)

## மரண அறிவித்தல்



*அகஸ்ரின் நீக்கிலஸ் யேசுநேசன்*
(வில்சன்)
*(கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர்)*

யாழ்ப்பாணம், சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறை, புனித தோமையார் பதியை வசிப்பிடமாகவும் கொண்ட அகஸ்ரின் நீக்கிலஸ் யேசுநேசன் (வில்சன்) (04-07-2007) புதன் கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி அகஸ்ரின் நீக்கிலஸ் (அழகையா) தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற திரு.திருமதி சூ.அந்தோனிப்பிள்ளை (குட்டிஞானி) தம்பதியரின் அன்பு மருமகனும் திருமதி யேசுநேசன் ஞானத்தின் அன்புக் கணவரும் செறின், சின்ரியுாவேஜினி, மரியதர்ஷினி ஆகியோரின் அன்புத் தந்தையும் பரமேஸ்வரி, மகேஸ்வரி, கிறிஸ்ரின்(யாழ்ப்பாணம்), புவனேஸ், ஈஸ்வரி, றூபலாவதி (மன்னார்), ஜோசப்நேசன், எல்வின் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் மதுரநாயகம், றாஜி, சிலோஜி, ஜீவா, றாஜூ, மரினா ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.


அன்னாரின் நல்லடக்க திருப்பலி நாளை(09-07-2007) திங்கட் கிழமை முற்பகல் 10 மணியளவில் புனித தோமையார் ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்பட்டு, நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

*தகவல்:*
**மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள்.**

சென்.தோம்ஸ் லேன்,
பருத்தித்துறை. (சி/52856)

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர் **பொன்னையா நவரத்தினம்**
(இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர் )

| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 25.08.1925 | 31.05.2007 |

கடந்த 31.05.2007 சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் பொ.நவரத்தினம் அவர்கள் சுகயீனமுற்று இருந்தவேளை வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல உதவியவர்களுக்கும் யாழ்.போதனா வைத்தியசாலை டாக்டர்களுக்கும், தாதியர்களுக்கும், மருத்துவபீட மாணவர்களுக்கும் மற்றும் அஞ்சலி நிகழ்வில் உரையாற்றியோருக்கும், தொலைபேசி மூலமும் தந்தி மூலமும் தொலைநகல் மூலமும் அனுதாபம் தெரிவித்தோருக்கும் மலர்வளையம் கொண்டு வந்தோருக்கும் எமது குடும்பத் தலைவரின் உடலை பொறுப்பேற்ற மருத்துவபீடத்தினருக்கும் பலவழிகளிலும் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பிகள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இன்று (08.07.2007) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிரதானவீதி, சங்கானை.
T.P: 0779 383212

திருமதி கனகர்மா நவரட்ணம் (மனைவி), திரு.திருமதி பவளச்சந்திரன் (மருமகன், மகள், பேரப்பிள்ளைகள்),
திரு.திருமதி தயாளன் (மகன்,மருமகள்,பேரப்பிள்ளைகள்),
செல்வி சகீல்வா (மகள்).
(62515)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக, பண்பாட்டு மேம்பாட்டுக்கான ஊடகக்கல்வி தேவை; அதற்கான திட்டத்தை உறுதிசெய்வதில் இனியும் தாமதம் கூடாது

**மக்களின், மாணவர்களின் அறிவுசார் வளர்ச்சிக்கு, உலகளாவிய ரீதியில் மிகப் பெரிய அளவில் உதவி வருகின்றது ஊடக அறிவுக் கல்வி.**

**குடாநாட்டில், எந்தளவிற்கு அது பயன்பாடு காண்கிறது என்பது சம்பந்தமாக இந்தக் கட்டுரை விரிவாக ஆராய்கிறது.**

**யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் என்.சண்முகலிங்கனும் சமூகவியல்துறை மாணவர்களும் மேற்கொண்ட ஆய்வுகள், மதிப்பீடுகளின் அடிப்படையில் இக்கட்டுரை அமைகிறது.**

**தெல்லிப்பழை, மகாஜனக் கல்லூரியின் நிறுவுநர் பாவலர் தெ.அ.துரையப்பாபிள்ளையின் நினைவுப் பேருரை இங்கு கட்டுரை வடிவத்தில்.**

எங்கள் பாடசாலைகளின் கலைத்திட்டத்தில் ஊடக அறிவிற்கான இன்றியமையாத இடத்தை உறுதி செய்வதில் இனியும் கால தாமதம் கூடாது. கல்விக் கொள்கை வகுப்பாளர்கள், கல்விச் சமூகவியலாளர்கள், ஊடகவியலாளர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், மாணவர்கள் ஆகிய அனைவரும் பங்கேற்கும் சிந்தனைக்களங்களின் வழி, ஊடக அறிவு கல்விக்கான திட்டங்கள் செயல் வடிவம் பெறவேண்டும்.

* ஊடகங்களின் தாக்கங்கள் பற்றிய விழிப்புணர்வு

* வெகுஜன தொடர்பு ஊடகங்களின் உள்ளடக்கங்களை பகுப்பாய்வு செய்து பகுத்துணரும் திறன்.

**சமூக மேம்பாட்டுக்கான ஊடக அறிவுக் கல்வி 2**

* நல்லதை ஆராதிக்கவும் அல்லாததைத் தவிர்ப்பதற்குமான ஏற்பாடுகளைக் காணல்

* எங்களுக்கு வேண்டிய நலமான ஊடகங்களை, ஊடகப்பண்பாட்டினைக் கட்டியமைத்தல்.

### சமூக, பண்பாட்டு மேம்பாட்டுக்கான ஊடகக் கல்வி அறிவு தேவை

முன்சொன்ன இலக்குகளைக் குவிமையமாகக் கொண்டு எங்களின் ஊடக அறிவுக்கான கலைத்திட்ட வகுப்பும், கற்பித்தலும் ஒழுங்கமைக்கப்படவேண்டும். ஊடக அறிவு பற்றிய இந்தச் செயற்பாடுகள் தனியன்களை நோக்கியதாக நுண்நிலையில் அமையும் அதேவேளை, பருநிலையில் ஒட்டுமொத்தமான சமூகமேம்பாட்டுக்கும் பண்பாட்டு மேம்பாட்டுக்கும் உரிய விதத்தில் எங்கள் செயற்பாட்டினைத் திட்டமிடுவதும் அவசியமாகும்.

நுண்நிலையில் தனியங்களின் எதிர்பார்ப்புக்கள், ஊக்கங்கள், சிறப்பு ஆர்வங்கள் என்பவற்றினடியாகவே ஊடக புலக்காட்சியின் ஆழமும் ஊடுருவுதலும் அமைகின்றமை கவனம் பெறவேண்டும். பிள்ளைப்பருவ முதலே வளர்க்கப்பட்ட ரசனை, விழுமியங்களினடியாகவே புலக்காட்சிக்கான மேற்சொன்ன உளவியல் காரணிகள் கட்டமைக்கப்படுகின்றன.

ரசிகர்கள் மனதில் உள்ள அல்லது அவர்கள் காண விரும்புகின்ற ஒரே வார்ப்பிலான மாதிரி வடிவங்களில் திரைப்பட, விடியோ பாத்திரங்கள் - கதையமைப்புக்கள் அமையப் பெறுவதும் இதன் அடிப்படையில் தான். யதார்த்த வாழ்வியல் நிலைமைக்கு முரணான முற்சாய்வான (Prejudice) கற்பிதங்களை ஊடகங்கள் விதைப்பதும் பின்னர் ஒரே வார்ப்பில் மீளமீள அதேமாதிரி வடிவங்கள் தரப்படும் போது அவை நம்பகமாக உணரப்படுவதும் என ஒரு விஷ வட்டமாகவே எல்லாம் நடந்து கொண்டிருக்கின்றன.

## தங்களைக் காப்பதற்காக ரசிகர்களே கட்டுப்பாடு விதிக்க வேண்டிய தேவை இங்கு

பல சந்தர்ப்பங்களில் ரசிகர் மகிழ்ச்சிக்காக அல்லது பொழுதுபோக்குக்காக என நிகழ்ச்சிக்கான காரணங்கள் சொல்லப்பட்டபோதும், இந்நிகழ்ச்சிகளின் விநியோகஸ்தர்கள் அல்லது இவற்றுக்கு அனுசரணையாகும் அரசுகள், அரசுசாரா ஊடக நிறுவனங்களுக்கு மறைகரமான நிகழ்ச்சிநிரல் உள்ள விடயமும் ஊடக அறிவாக உணரப்படவேண்டியது இன்றியமையாதது. மக்களின் சிந்தனை வெளியை மூடி நிரப்பி விடுவதன் மூலம் தயாரிப்பாளர்களுக்குப் பணலாபமும் அரசுகளுக்குத் தாம் நினைத்தவாறு எதிர்ப்புகளின்றி 'அலுவல்களை' செய்து முடிப்பதற்கான அரசியல் இலாபமும் வாய்த்து விடுகின்றமை கவனம் பெறவேண்டும்.

### கத்தரிகளைத் தாண்டி வீட்டுக்குள் நுழைந்துவிடும் இலத்திரனியல் ஆக்கங்கள்

இந்தவகையில் ஊடகங்களின் உடைமையாளர்கள் யார்? என்ற கவனிப்பும் கூடவே இன்றியமையாதது. அரசியல் மற்றும் சமூக விவகாரங்கள் தொடர்பான ஊடக உடைமையாளரின் கருத்தியலுக்கு ஏற்பவே நிகழ்ச்சிகளின் நிர்ணயம் என்பது அடிப்படையான உண்மையாகும். பல சந்தர்ப்பங்களில் பாரபட்சமானவையாய், மேலாண்மைச் சக்திகளின் விழுமியங்களோடு முரண்படாமையே ஊடக நெறிமுறையாகிவிடுகின்றது. இதனாலேதான் தொலைக்காட்சிச் செய்திகள் நடுநிலைமையானவை அல்ல எனப்படுகிறது. சமூக அரசியல் ரீதியான பண்பாட்டுப் பொருளாகவே செய்திகளும் வடிவமைக்கப்படுகின்றன என்பதற்கு ஆழமான ஆய்வு ஏதும் வேண்டியதில்லை. எந்தக்கட்சிக்காரரின் ஊடகம் என்ற உடைமை அறிவுடனேயே வாசிக்கப்படும் செய்தியையே நாங்கள் கேட்க வேண்டியிருக்கிறது.



**பேராசிரியர் என். சண்முகலிங்கன்**
தலைவர்,
சமூகவியல்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

தணிக்கை செய்து இவற்றினைக் கட்டுப்படுத்துதல் என்ற நடைமுறை இன்று ஒரு புறம் அர்த்தமிழந்துள்ளது; மறுபுறத்தே ஆபத்தான அபத்தமாகவுள்ளது. புதிய தொழில்நுட்ப வீச்சிடை கத்தரிகளைத் தாண்டி இலத்திரனியல் ஊடக ஆக்கங்கள் வீட்டுக்குள் நுழைந்துவிட, தொடக்ககால ஊடகமான அச்சு ஊடகங்கள் மட்டும் அகப்பட்டுப் போய் விடுகின்ற அவலத்தினை இங்கு கவனத்தில் கொள்ளவேண்டும்.

எங்கள் குவிமையமான தொலைக்காட்சிப் படைப்புகள், விடியோத் திரைப்படங்கள் தொடர்பாக பிரித்தானியா போன்ற நாடுகளின் நடைமுறையில் இருந்த தணிக்கை முறைகள் எங்கள் புலங்களில் அறிமுகமாகவே இல்லையெனலாம்.

U- சர்வதேச பார்வையாளருக்கானது
BG- பெற்றோர் வழிகாட்டலுடன் பார்க்கப்படவேண்டியது.
15- பார்வையாளருக்கு குறைந்தது 15 வயதாவது இருக்க வேண்டும்
18 - பார்வையாளருக்கு 18 வயதுக்கு மேலிருக்க வேண்டும்.

என்பதான நுண்ணிய தணிக்கை முறைகள் எங்களிடமில்லை.

ஆபத்தமான ஆபாசங்கள் அனைத்தையும் அனுமதித்து 'ஆபாசமென' சிலவற்றை கத்தரிக்கும் தணிக்கை முறை தமிழ்நாட்டில் உள்ளது. எங்களது புலங்களில் இந்த மாயத்திரை மயக்கங்களுக்கு இருந்த தடை, தணிக்கைகளை இன்றைய சூழமைவு சாத்தியமற்றதாக்கியுள்ளது.

ஊடகங்கள் மக்களுக்குக் கணக்கு சொல்ல வேண்டும் என்ற நெறிமுறை முற்றாக இல்லாத நிலையில், ரசிகர்களாகிய மக்கள் தான் சுய விழிப்பு/சுய கட்டுப்பாட்டின் வழி தங்களைக் காக்கவேண்டியுள்ளது.

இன்றைய உலகமயமாக்க அலைகளிடை சுதேச பண்பாடுகள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் கொஞ்சமல்ல. அன்னிய நியமங்கள் விழுமியங்களை ஊக்குவிக்கும், உள்ளூர் பண்பாடுகளை தாழ நோக்கும் படைப்புக்கள் பல்தேசியக் கம்பனிகளின் தயாரிப்புக்களாய் உலகச்சந்தை வழிமிக மலிவாகவே உள்வந்து விடுகின்றன.

நிகழ்பவற்றை நியாயப்படுத்தும் விதமாக 'Think Globally, Act Locally' - உலகளாவிய நிலையில் சிந்தி, உள்ளூர்தனமாய் செயற்படு என்ற பொன் மொழிச் சுலோகங்களும் முன்வைக்கப்படுகின்றன. இந்தப் புதிய சிந்தனைகள், தீர்க்க தரிசனங்கள் போல உள்ளூர் பண்பாடுகள் உலகமய மாதலுக்கான சில உதாரணங்களைக்காண முடிந்தாலும் உலகப் பண்பாடு உள்ளூர் மயமாகுமா?

தேச எல்லைகளை அர்த்தமற்றதாக்கி, தனியன்களின் பண்பாட்டு அடையாளங்களை இல்லாமல் செய்து வெறும் நுகர்வாளர்களாகத் தனியன் கனவுகளை ஆராதிக்கும் இன்றைய ஊடகப் பண்பாட்டின் மாயத்திரை விலக்கி, உலகசமுதாயத்தை, மனித பண்பாடுகளை மீட்கும், காக்கும் பணியில் புதிய ஊடகங்களை உருவாக்கவும் புதிய ஊடகப் பண்பாட்டினை வளர்க்கவும் ஏற்ற செயற்பாடுகளையும் இந்த ஊடக அறிவு இயக்கச் (media Literacy Movement) செயற்பாடாகவே மேற்கொள்வதும் இன்றியமையாதது.

(முற்றும்)

# வலுவிழந்த மக்களை வலுவுள்ளவர்களாக மாற்றும் ஜெய்ப்பூர் நிறுவனம்

பலவித எதிர் நீச்சல்களுடன் யாழ். ஜெய்ப்பூர் நிறுவனமானது 01.07.2007 ஆம் திகதியுடன் தனது 20ஆம் அகவையைப் பூர்த்தி செய்துள்ளது. பல்வேறுபட்ட காரணங்களால் தமது அவயவங்களை இழந்த மக்களிற்கு ஊன்றுகோலாகவும் நண்பனாகவும் வழிகாட்டியாகவும் சேவை புரிந்து வரும் யாழ்.ஜெய்ப்பூர் நிறுவனமானது 1987 ஆம் ஆண்டு யாழ்.அன்னையர் முன்னணியின் அயராத முயற்சியால் 'நோராட்' (NORAD) நிறுவனததின் அனுசரணையுடனும், கொழும்பு நட்புறவுச் சங்கத்தின் ஒத்துழைப்போடும் ஆரம்பிக்கப்பட்டது. அன்று தொடக்கம் இன்றுவரை தொடரும் யுத்தத்தின் மத்தியிலும் பல இடம்பெயர்வுகளை எதிர்கொண்டும் அல்லலுறும் மக்களுக்குத் தன்னாலான அனைத்து சேவைகளையும் தொடர்ந்து வழங்கிவருகின்றது.



**டாக்டர் க.நந்தகுமார்**
சுகாதார சேவைகள் பணிப்பாளர் - வடமாகாணம்

யுத்தத்தின் காரணமாகவும், விபத்துக்களினாலும், நோய்நிலைகளினாலும் தமது அவயவங்களை இழந்தவர்கள் வீட்டுக்குள் முடங்கியிராது தங்களது தொழிலில் தொடர்ந்து ஈடுபடவும் சமுதாயத்தின் வளர்ச்சியில் பங்குபற்றும் அங்கத்தவர்களாகவும் மாறுவதற்கு ஜெய்ப்பூர் நிறுவனம் வழிவகுத்துள்ளது. வலுவிழந்தோர் அனைவரும் மாற்றுவலு உள்ளோர் என்ற பெரும் உண்மையை மெய்ப்பித்த பெருமை ஜெய்ப்பூர் நிறுவனத்தையே சாரும்.

## 20 ஆண்டுகள் சீரிய பணியாற்றிய பெருமையுடன் தொடர்கிறது

### நவீன தொழில் நுட்பத்தில்

அதிவேகமாக மாறிவரும் தொழில் நுட்பத்துடன் கூடிய விஞ்ஞான உலகிலே புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட செயற்கை அவயவங்களின் தயாரிப்பில் அதிநவீன தொழில் நுட்பத்தைப் புகுத்தியுள்ளது. அவயவங்களை உருவாக்குவதற்கான மூலப்பொருள்களைப் பலவித இடையூறுகள் மத்தியிலும் பலதடைகளைத் தாண்டி, பெற்று எம்மக்களுக்குரிய சேவையைத் தொடர்ந்து வழங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்களில் பலர் மாற்று வலுவுள்ளோராக இருப்பதனால் அவயவங்களை இழந்தவர்களின் கஷ்டங்களையும் வேதனைகளையும் புரிந்துகொண்டு அவர்களுக்குப் பொருத்தமான அங்கங்களை மிக நேர்த்தியாக வடிவமைத்துக் கொடுக்கின்றார்கள்.

அதுமட்டுமன்றி அவர்களின் அர்ப்பணிப்புடன் கூடிய சேவைமனப் பான்மையும் அன்பான வார்த்தைகளும் அங்கங்களை இழந்தவர்களின் வேதனைகளைத தணிப்பதற்கு ஆதரவாக அமைகின்றன.

செயற்கை அவயவங்கள் தயாரிப்பில் மட்டும் தன் பணியை மட்டுப்படுத்தாது போலியோ நோயால் பாதிக்கப்பட்டோர்க்குரிய 'கலிப்பஸ்' (Callipers), சக்கர நாற்காலிகள் (Wheel Chairs), முச்சக்கர வண்டிகள் (Tricycles), ஊன்று கோல்கள் (Crutches), நடைதாங்கிகள் (Walkers) போன்றவற்றை வடிவமைப்பதிலும் தன் சேவைகளை விஸ்தரித்துள்ளது. மாற்றுவலுவுள்ளோரின் சமூகபொருளாதார தரத்தை மேம்படுத்தும் நோக்குடன் கடன் வசதிகளையும் வேலைவாய்ப்புக்களையும் ஏற்படுத்திக்கொடுப்பதுடன் பாடசாலைச் சிறுவராயின் அவர்களின் கல்விக்கு மாதாந்த ஊக்குவிப்புத் தொகையையும் வழங்கிவருகிறது.

### திறமைகளை வெளிப்படுத்த

மாற்றுவலுவுள்ளோரின் ஆற்றல்களை வெளிக்கொணர்ந்து அவர்களைச் சமூதாயத்தில் பயனுள்ள அங்கத்தவர்களாகப் பரிணமிக்க வைக்கும் நோக்குடன் விளையாட்டுப் போட்டிகளையும் கலை, கலாசார நிகழ்ச்சிகளையும் ஒழுங்கு செய்து அவர்களது திறமைகளை வெளிபபடுத்த வழியமைக்கிறது.

யுத்தம் என்பது தொடர்கதையாகிப் போன இக்காலத்தில் வீதிவிபத்துக்கள் மலிந்து போன சூழ்நிலையிலும், நோய்களாலும் வயது முதிர்வால் ஏற்படும் அங்க செயலிழப்பாலும் இப்படியான ஒரு நிறுவனத்தின் சேவைகளை விஸ்தரிக்க வேண்டிய தேவை பலராலும் உணரப்பட்டுள்ளது. உலகெங்கிலும் வாழும் மனித நேயம் கொண்ட கருணை உள்ளங்களின் உதவியால் இது சாத்தியமாகும் என நம்புகின்றோம். மேலும் அங்கங்களை இழந்தவர்களும், அங்கங்களின செயல் இழந்தவர்களும் இன்றும் நம் மத்தியில் வீடுகளில் முடங்கி இருக்கத்தான் செய்கின்றார்கள். இவர்களை இனங்கண்டு இந்நிறுவனத்தினூடாக அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்க வேண்டியது நம் ஒவ்வொருவரினதும் கடமையாகும். யாழ்.ஜெய்ப்பூர் நிறுவனத்தினர் தமது 20ஆவது ஆண்டு நிறைவையொட்டி மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் முகமாக எதிர்வரும் 10,11,12 ஆகிய திகதிகளில் கண்காட்சியினை தமது நிறுவனத்தில் நடத்தவுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேவை அறிவித்தல்

1.அரைக்கும் ஆலை
1.ஈரஅரிசி மா வறுத்தல் 10/=
(உடனுக்குடன் பெற்றுக்கொள்ளலாம்)
* அனைத்து வகையான அரைத்தல் வேலைகள்
2.சுத்திகரிப்பு நிலையம்
1.மோட்டார் சைக்கிள் 250/=
* Prima Broiler- 650/- (1kg)
(62345)

தொடர்பு: பிருந்தா மில்ஸ்
இல.18, நக்கா றோட், யாழ்ப்பாணம். தொ.பே: 5745

## வீடு விற்பனைக்கு

மாநகர சபை எல்லைக்குள் சிவன்பண்ணை வீதியில் இரண்டு வீடுகளுடன் 4 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: 0779604195 (பி.ப.2மணிக்குப் பின்) (62517)

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

NPGI - XXXX இலக்க யமகா நியூஸ் மேற் நீலநிற நியூமொடல் மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.
தொடர்பு - 0776538060
கல்வியங்காடு. (62499)

## மணமகன் தேவை

யாழ். இந்து, போதனா வைத்தியசாலையில் பணிபுரியும் வைத்தியர், தனது 23 வயது படித்த மகளுக்கு பொருத்தமான நல்ல அரசாங்க உயர் பதவியில் இருக்கும் மணமகனை எதிர்பார்க்கின்றார்.
விளம்பர இல: 2987 மே/பா உதயன் (62491)

## மணமக்கள் தேவை

இந்து, கிறிஸ்தவர், சைவபோசனம், பாவக்கிரகம் மிகவும் குறைந்த ,கூடிய, செவ்வாய் தோஷம் உள்ள வெளிநாட்டு, உள்நாட்டு டாக்டர், எஞ்சினியர், எக்கவுண்டன், ஆசிரியர், அரச,தனியார், விவாகரத்தான, மணமக்களின் விபரம் பெற தொடர்பு கொள்ளவும்.
அமைப்பாளர்,
சிவாலயா சர்வதேச திருமணநிலையம்,
(அரசஅங்கீகாரம் பெற்றது)
389C , இராமலிங்கம் வீதி, முடமாவடி, திருநெல்வேலி
T.P.: 0775834982 (62489)

## மணமகள் தேவை

கௌரவ சைவ குடும்பத்தை சேர்ந்த, 12 வருடகாலமாக U.K. இல் வசித்து வரும் 5'6'' உயரமுடைய 30 வயதுடைய மணமகனுக்கு U.K. அல்லது ஐரோப்பிய நாடு ஒன்றில் பிரஜா உரிமை உடைய மணமகள் தேவை.
தொடர்பு: 0662256607 (62467)

## மணமகன் தேவை

யாழ். இந்து உயர்குலம், அழகிய இளம் பெண் வயது 30 செவிப்புலன் குறைவினால் பேச்சு தடைப்பட்டவர். தகுந்த வரன் தேடப்படுகிறது. விவரங்களுடன் தொடர்பு கொள்க.
விளம்பர இல.2986
உதயன் மே/பா (62464)

## மணமகள் தேவை

Australia Residence, Ceylon Tamil, வயது 31, உயரம் 5' 9'', B.Com. (Special) பட்டதாரி, கணக்காளர் மகனுக்கு தாயார் 30 வயதுக்குட்பட்ட பெண்ணைத் தேடுகின்றார்.
தொடர்பு: 0061431739974,
0112930406, 0777 666981
Email: proposalan@yahoo.com
(சி/57784)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1971ஆம் ஆண்டு ரோகினி நட்சத்திரம் 7 இல் செவ்வாய் உள்ள மணமகனுக்கு தகுந்த மணமகளை எதிர் பார்க்கிறோம்.
தொடர்பு: வே.கிருஷ்ணகுமார்
0776568922 (62508)
பொற்பதிறோட், கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

## விற்பனைக்கு

கந்தரோடை, ஸ்கந்தவரோதயா பாடசாலைக்கு அருகில் 2¼ பரப்புடன் மூன்று அறைகளுடன் கூடிய புதிய வீடு உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: அருள் (குஞ்சன்)
3ஆம் கட்டை ,
K.K.S. வீதி, கொக்குவில்.
(62498)

## இறைச்சிக்கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம்செய்து பெற்றுக்கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்ரர்,
19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்.
(62399)

## இறைச்சிக்கோழி

உயிர் புறொயிலர் இறைச்சி, கல்பேட் என்பன மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு.
NEW R.S.K FARM
(62330) மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில்.

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

ஐஸ் பிறிமா, உயிருடன் புறொயிலர், கல்பேட், விறாத்துக் குஞ்சுகள் என்பன சுத்தம் செய்து வேண்டிய அளவுகளில் பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்பு: மல்ரி பாம் சென்ரர்
61.இராமநாதன்வீதி.கலட்டி, யாழ்ப்பாணம்.
(62512)

## விற்பனைக்கு

புறொயிலர் (Broiler) கோழி
விற்பனைக்குண்டு.
தொடர்பு : அன்னை பாம், இணுவில்.
(சி-52852)

## சொகுசான நவீன CAR வாடகைக்கு



★ திருமணம் (அலங்காரத்துடன்)
★ சுற்றுலா ★ விசேட வைபவங்கள்
போன்ற அனைத்து தேவைகளுக்கும் ஆங்கில இலக்கம் கொண்ட நவீன கார் சாரதியுடன் நியாயமான விலையில் உயர்ந்த சேவையுடன் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு: ரட்ணம்
சோமசுந்தரம் பாடசாலை
22, சோமசுந்தரம் அவனியூ, சுண்டிக்குழி, யாழ்ப்பாணம்.
(61623)
T.P.: 0777-903090
0777 246117

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 21 - 11 - 1937



மறைவு 08 - 06 - 2007


திருமதி
### சிவபாக்கியம் செல்லப்பா

இன்று (08.07.2007) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

டச்சுறோட்,
அளவெட்டி.
குடும்பத்தினர்.
(62497)

கலாநிதி நடிகமணி
### வி.வி.வைரமுத்து அவர்களின்
## பதினெட்டாம் ஆண்டு நினைவு தினம்

மண் அரங்கில் 11 - 02 - 1924



விண் அரங்கில் 08 - 07 - 1989

செந்தமிழ் பண்பாடு பண்பு நிறை
செழுங்கலையாம் நாடகத்திற் குயிருமூட்டி
பைந்தமிழின் பாடல்கள் உருகப்பாடி
பசுந்தமிழின் நாடகத்தின் நடிப்பும் காட்டி
அந்தமிலாக் கலையின்பம் தந்தார் எங்கள்
அருங்கலைஞர் நடிகமணியாம் ஈழநாட்டின்.

'சாரங்கா',
காங்கேசன்துறை.
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.
(62451)

## The phone Shop Manipay

எம்மிடம் சகலவிதமான Hand Phone களும்
* Soft ware * Hard ware Repairing செய்து கொடுக்கப்படும்.
குறிப்பு:- Nokia, 6630, 6680, 6681, N70, N91
என்பன Unlock செய்து கொடுக்கப்படும்.

Address: **The Phone Shop**
Alady Junction, Manipay.
T.P.No. 0777571910 (62457)

**FELICITATION TO**
**REV.N.J.GNANAPONRAJA**
**PRINCIPAL**
**ST. JOHN'S COLLEGE, JAFFNA**

*Venue* : Peto Memorial Jubilee Hall
*Date* : 21 st July 2007 (Saturday)
*Time* : 12.30 p.m.

Parents, Old Boys and well wishes who wish to attend this function are kindly requested to contact the Treasurer Mr.T.Nanthakumaran at the College between 8.30 a.m. - 2.00 p.m. on or before the 20th of July 2007.

Tickets - Single *Rs.500*
Couple *Rs.750*

V.Sanjeev,
Secreraty.
(C/52855)

## மரண அறிவித்தல்கள்

### செல்லப்பா சுப்பிரமணியம்

(ஓய்வுபெற்ற சிறாப்பர்)



271/10, கச்சேரி, நல்லூர் வீதியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா சுப்பிரமணியம் (04-07-2007) புதன்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா - காமாட்சி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கனகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற செல்லத்துரை -சிவயோகம் தம்பதியரின் மருமகனும் அமரர் கணபதிப்பிள்ளை, அமரர் மாணிக்கம், நமசிவாயம் (கனடா) ஆகியோரின் சகோதரனும் முரளீகரன் (லண்டன்), ஜெகதீஸ்வரன் (லண்டன்), யோகேஸ்வரன் (கனடா), யசோகரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கம்ஷா, புஸ்பா, சிவாஜினி, ஜானகி ஆகியோரின் மாமனும் குணசுகி, சிந்தியா, பிரசாந், ரூபி, வைஷ்ணவி, வைதேகி, நேத்திரா, விதுசன், அனுசன், தீபிகா ஆகியோரின் பேரனும் சஞ்சீவன், பிரணவிக்கா ஆகியோரின் பாட்டனு மாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08-07-2007) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு லண்டனில் உள்ள இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
தனேந்திரன் குணசுகி.
271/10, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.
(62426)

### இராசரத்தினம் நித்தியானந்தன்

இணுவில் மேற்கை நிரந்தர வதிவிடமாகவும், வவுனியாவில் தற்காலிகமாக வாழ்ந்து வந்தவருமான இராசரத்தினம் நித்தியானந்தன் 30.06.2007 சனிக்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் இணுவில் மேற்கைச் சேர்ந்தவரான இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர் இராசரத்தினம் -பரமேஸ்வரி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த பொன்னப்பா - அமரரான செங்கமலம் தம்பதியரின் மருமகனும், தனலட்சுமியின் அருமை கணவரும், சோபனா, நிசாந்த ஆகியோரின் தந்தையாரும் புவனேஸ்வரன், உதயகுமாரி, செல்வமலர், குருபரன், திலகம் ஆகியோரின் அருமை மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 02-07-2007 திங்கட்கிழமை வவுனியாவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.
இணுவில் மேற்கு,
இணுவில்.
(சி-52853)

**United Nations Development Programme**
**Sustainable human development**
UNDP is the UN's global development network, advocating for change and connecting countries to knowledge, experience and resources to help people build a better life. We are on the ground in 166 countries, working with them on their own solutions to global and national development challenges. As they develop local capacity, they draw on the people of UNDP and our wide range of partners.

**VACANCY ANNOUNCEMENT**

To implement UNDP initiatives in collaboration with the Government of Sri Lanka, we invite applications from qualified Sri Lankan Nationals for the following position.

**FIELD PROGRAMME OFFICER**
**DUTY STATION - Jaffna**

**Under the supervision of the Senior Programme Officer, the incumbent will:**


Assist in the coordination and management of programme activities;
Strategize and analyze programme activities to strengthen programme cohesion;
Facilitate the identification and formulation of sub-projects;
Represent UNDP in the inter-agency steering committee
Ensure strong integration with other UNDP activities in the district;
Conduct regular supervision through field visits and assess the overall project implementation status and provide corrective measures to be undertaken, as necessary;
Monitor programme activities and ensure the timely submission and preparation of monitoring and evaluation reports;
Work closely with the implementing local partner to ensure timely resolve of difficulties in implementation;
Perform any other duties as required.

**Educational Background:**
University degree in political science, social science, development studies, economics or related
**Experience:**
3-5 years of experience in programme support including planning and formulation of project proposals, monitoring, reporting etc;
3-5 years of practical experience in the area of rehabilitation, recovery and development;
Experience in income generation, social mobilization, area based development, capacity building in North East an asset.
**Languages:**
Excellent command of English and Tamil (writing, speaking and reading).
Ability to communicate in Sinhala
**Others:**
Computer skills in MS office;
Ability to work as a member of a multi-disciplinary and multicultural team;
Strong negotiation and interpersonal skills with good initiative and sound judgment;
Motivated, flexible and capable of working under pressure;
Willingness to undertake regular field visits North and East.
Willingness to work out of normal office hours.

UNDP offers an attractive compensation package commensurate with experience. This position is a non-career appointment for limited duration with possible extensions. Please send your cur[illegible] contact telephone numbers to reach us at the latest by 18 July 2007. Applications should be addressed to the Operations Manager (Field), UNDP, 12, Bagatalle Road, Colombo 3 or Senior Programme Officer ,UNDP, 121, Temple Road, Jaffna. UNDP will only be able to respond to th[illegible] female candidates are encouraged to apply.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தின் தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் இரண்டாவது தலைமுறையைச் சேர்ந்தவர் பழம்பெரும் எழுத்தாளரும் பத்திரிகையாளருமான அ.செ.மு. எனச் செல்லமாக அழைக்கப்பட்ட அ.செ. முருகானந்தம்.



தமது இளம் வயதிலேயே எழுதத் தொடங்கி, அந்த எழுத்துக்கள் மேல்கொண்ட தணியாத தாகத்தில், பத்தொன்பதாவது வயதில் பத்திரிகையாளனாகச் சேர்ந்து தனது இறுதிக்காலம் வரை எழுதிக் கொண்டே இருந்தவர் அ.செ.மு.

ஈழகேசரி, சுதந்திரன், வீரகேசரி, ஈழநாடு ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியர் பீடங்களை அலங்கரித்தபோது அவர் கணக்கில்லாமல் எழுதிக் குவித்தார்.

மறுமலர்ச்சி மற்றும் எரிமலை ஆகிய பத்திரிகைகளை நடத்தி இணையாசிரியர், ஆசிரியர் பதவிகளை வகித்தவர். அந்தக் காலத்திலேயே- நாற்பதுகளிலேயே - இலட் சியக் கதைகளையும் சீர்திருத்தக் கதைகளையும் எழுதி ஈழத்துச் சிறுகதை வரலாற்றில் ஒரு திருப்புமுனையையும் சாதனையையும் நிலைநாட்டியவர் அ.செ.மு. அவர்கள்.

நாவல், குறுநாவல், சிறுகதை, கட்டுரை, நாடகம், மொழிபெயர்ப்பு, வானொலி நிகழ்ச்சி என்று அவர் தொடாத துறையே - இலக்கியம் சார் அம்சங்களே- இல்லை. நூறுக்கு மேற்பட்ட சிறுகதைகளையும் 500மேற்பட்ட கட்டுரைகளையும் எழுதிய கை அவருடையது. பதினைந்துக்கும் மேற்பட்ட பத்திரிகைகள், சஞ்சிகைகளில் எழுதியிருக்கிறார்.

அந்தக் காலத்தில், ஏன் சுமார் 20 வருடங்களுக்கு முன்னர் கூட எழுத்தாளர்கள் தமது ஆக்கங்களை நூலுருவில் கொண்டு வருவது என்பது கல்லில் நார் உரிப்பது போன்றதே.

அந்த வகையில் நாமறிய அவரது 24 சிறுகதைகள் அடங்கிய "மனித மாடு" என்ற சிறுகதைத் தொகுப்பு ஒன்றே அவரது எழுத்துக்களை பறைசாற்றி நிற்கின்றன. "மனித மாடு" கூட அவர் கதை எழுதத் தொடங்கி ஐம்பது ஆண்டுகளின் பின்னரே தொகுதியாக வெளிவந்தது.

'விளம்பர வாழ்வு' என்ற இச்சிறுகதை ஒரு சமூகம் தண் ணீர்த் தாகத்தால் தவிக்க, இன்னொரு சமூகம் தண் ணீரை வீண் விரயமாக்கும் அநியாயத்தினைச் சாடுவதை தனது கருவா கக் கொண்டிருக்கிறது. ஏனைய கதைகளைப் போலவே அவ ரது எழுத்தின் வேகமும் வீச்சும் இங்கு பொங்கிப் பாய்கின்றன.

பழமைவாதிகளுக்கு சாட்டை அடி கொடுத்து புதுமைக் கோஷம் எழுப்பிய முதல் பரம்பரை எழுத்துப் போராளி அ.செ.மு ஐயாவின் அன்றைய சிந்தனைப் போக்கையும், எமது மக்களின் அன்றைய வாழ்வியலையும் பிரதிபலிக்கும் இச்சிறுகதையை இன்றைய சந்ததியினர் வாசிப்பதற்கு வாய்ப்பாக இங்கு வெளியிடுகிறோம்.

# விளம்பர வாழ்வு

மேற்குப் பக்கமாகச் சொற்ப தூரத்தில் பிரமாண்டமான கட்டடம் ஒன்று எழும்புகிறது. நூற்றுக்கணக்கான வேலைக்காரர்கள் வியர்க்க விறுவிறுக்க நின்று வேலை செய்கிறார்கள். ஏவல், அதட்டல், இளைப்பு, பெருமூச்சு எல்லாம் சேர்ந்து ஒரே இரைச்சல், ஆர்ப்பாட்டம், வானையளாவும் கோபுரங்கள், மணிக்கூண்டுகள்-சூ! அதெல்லாம் பெரும் பெரும் காரியங்கள். புனித கைங்கரியங்கள்.

இங்கே வலது புறமாகக் கிழக்குத் திசையில் இன்னொரு கட்டடம். அதைப்போலப் பிரமாண்டமல்ல. ஆனால், பெரியது தான். எடுப்புக்கும் ஏற்பாட்டுக்கும் குறைவில்லை. இரண்டடுக்கு மெத்தை மாளிகை. முக்கால் பருவத்துக்கு வந்துவிட்டது. இது சமீபத்தில் 'பென்ஷனி'ல் ஊர் திரும்பிய ஒரு 'பெரிய' மனுஷனுக்கும் அவர் மனைவிக்கும், இரண்டு பேருக்கு!

எதிர்ப்பக்கத்தில், நேர்முகமாக ஒரு கிணறு. 'பளிங்கு'க் கற்கள் பதித்து 'ஸிமெண்டி'னால் வெகு அழகாகக் கட்டப்பட்டிருக்கிறது. இரண்டு 'அம்மாப் பெண்டுகள்' (அங்கே எழுப்பி வருகிறதே நீட்டி முழக்கிக் கொண்டு ஒரு கோவில், அதன் அத்திவாரத்திற்கு முன்னரே எப்பொழுதோ அந்தப் பிரதேசத்திற்கு வந்து குடியேறிவிட்டவர்கள்) அந்தக் கிணற்றில் இரண்டு மணித்தியாலமாக நின்று தங்கள் 'நானாதி'களை நிறைவேற்றுகிறார்கள்.

கிணற்றடி மதகுள் நுழைந்து வாய்க்கால் வழியே தண்ணீர் வெளியே வருகிறது. அதென்ன வெள்ளை வெளேரென்று நுரை நுரையாக இருக்கிறது? ஆமாம். வாசனை 'சோப்' கரைந்த நீர். தண்ணீர்கூட 'கம கம' என்று வாசனை அடிக்கிறதா? விலையான 'சோப்'!

அந்த வெள்ளைத் தண்ணீர், வாசனைத் தண்ணீர், அழுக் குத் தண்ணீர் வாய்க்கால் வழியே வருகிறது...

★ ★ ★

மழையுடன் சேர்ந்த சூறைக் காற்றுப் பிய்த்து எறிந்து உக்கிய, உருக்குலைந்த பனை ஓலைகளை ஒருவாறு சேர்த்து மெல்லிசாகத் தொடுத்திருந்தான், அவன்.

மாட்டுக் கொட்டிலை விடக் கொஞ்சம் பெரியதான அந்த ஓட்டைக் கொட்டிலில் எட்டுச் சீவன்கள். மனிதஜன்மம் ஐந்து. ஆடும் மாடுமாக மூன்று. நல்ல வேளையாக அவையெல்லாம் குளிரில் விறைத்துச் செத்துப் போய்விட்டன. செத்தபிறகும் அவைகளால் இடைஞ்சல் ஏற்ப டாதவாறு வெள்ளம் அவற்றின் உடல்களை அடித்துக் கொண்டு போய்விட்டது.

இரண்டு நாட்களுக்கு முன் தண்ணீரில் மூழ்கியிருந்த அந்தக் "குடில்" இன்றைக்குச் சிறிது தலை நிமிர்த்திற்று. சுற்றி லும் கடல்போல நின்ற மழைவெள்ளம் பெரும் சிரமப்பட்டுச் சிறிது சிறிதாக வற்ற ஆரம்பித்தது.

★ ★ ★

"தண்ணீர்! ஐயோ கொஞ்சம் தண்ணீர்!"

தண்ணீர் இல்லை. ஒருமைல் தூரம் போகவேண்டும். சாஷாத் பிசாசுமயம். ஒருத்தி ஒரு சொள்ளை மண்குடத்தையும் எடுத்துக் கொண்டு வெளியே ஓடுகிறாள் தண்ணீருக்குள். அடுத்த நிமிஷம் சாகப்போகின்ற உயிர் ஒரு சொட்டு தண்ணீர் குடித்துவிட்டுச்சாகக் கிடந்து துடிக்கின்றது. தண்ணீர் கொண்டு வர ஒரு கட்டை தூரத்திலுள்ள கிணற்றடிக்கு, ஒருத்தி - அந்த ஜீவனைப் பெற்றெடுத்த பாவி ஓடுகிறாள். எதிரே கிணற்றடி! ஆனால் புனிதம், புனித மயம்!

"ஐயோ தண்ணீர்!"

குழந்தையின் தவிப்பை, துடிப்பை அதன் அப்பனால் சகிக்க முடியவில்லை. "இதோ அடுத்த நிமிஷம் சாகப்போகிறது. ஒரு சொட்டுத் தண்ணீர்கூட ஆகாமலா?" இந்த எண்ணம் ஒரு மரக் கட்டையில் சுருண்டு கிடந்த அந்தக் 'குன்மவியாதி'யை ஒரு தரம் உலுப்பிவிட்டது. பைத்தியக்காரன்போல எழுந்து முற்றத்துக்குப் போனான். சமுத்திரம்போல் வெள்ளம் பரந்து கிடந்தது. ஒரு கை அள்ளிக்கொண்டு வந்து குழந்தையின் வாயில் விட்டான்.

ஊரில் உள்ள முழு அழுக்கும் கலந்த அந்த ஒரு சிறங்கை தண்ணீரை தாகத்தில் தவித்துக்கொண்டிருந்த எட்டு வயசுக் குழந்தை ஆவலோடு விழுங்கியது... அடுத்த கணம் வாந்தி... தண்ணீரும் பிராணனும் இரண்டும் வாந்தி!

அரைமணி கழித்து, தண்ணீருக்குப் போனவள் வந்தாள் தண்ணீர்கொண்டு. இன்னுமொன்று கூட, மண்டையில் ஒரு காயம்.

'தண்ணீர் பட்டபாடு' என்ற பழமொழி இவர்களுக்கில்லை. கட்டுப்பாட்டு அளவு. நாலு ஐந்து குடம் தண்ணீர் ஒரு நாளைக்கு. அதற்குமேல் போனால் ஊற்றமாட்டார்கள். அன்றைக்கு ஆறாவது முறையாகப் போய்விட்டாள். மண்டையை உடைக்காமல் வேறு என்ன செய்வார்கள்?

பெற்றமனம் சிறிது நேரம் கரைந்தது. அப்பன் அதை விட அதிகமாகத் துடித்தான், தான் செய்ததை நினைத்து நினைத்து.

பிறகு எல்லாம் சரியாய்ப் போய்விட்டது. இது அவர்களுக்கு வருஷா வருஷம் ஒவ்வொரு மழைக்காலத்திலும் நடக்கும் சம்பவம்! ஆடுமாடுகளுடன் குடும்பத்திலும் ஒன்று பலி. இது ஆறாவது இடம், நான்காவது பலி!

ஒரு குன்ம வியாதியையும் நாலைந்து பிள்ளைகளையும் வைத்து அவள் - ஒரு - பெண் - சம்ரஷிக்க வேண்டும். அத்துடன் இயற்கையின் வெறிக்கும் விபரீதத்துக்கும் வகை சொல்லவேண்டும்.

எல்லாவற்றையும் ஒருவாறு கொண்டு நடத்தித்தான் வருகிறாள் அவள் தன்னந்தனியாக. எப்படி என்று கேட்கிறீர்களோ? வாயை மூடுங்கள்! நீங்கள் யார் அதைப்பற்றி கேட்க?

சரி இப்போது ஏழாவது இடத்துக்குக் குடிபோகப் போகிறார்கள். மூட்டை கட்டுகிறார்கள். தங்க விக்கிரஹம் போன்ற அழகான குழந்தை ஒன்று.... அது சரி, தகப்பன் அப்படி ஒரு அழகனல்லவே! அவலஷணம் பிடித்த குன்மவியாதி.....

அதையெல்லாம் ஆராய்ச்சி செய்வதற்கு உரிமை இல்லை. எனக்குமில்லை, உங்களுக்குமில்லை.

அவர்கள் மூட்டை கட்டுகிறார்கள். வேண்டுமானால் இதையும் கொஞ்சம் கவனித்து வையுங்கள்.

"கோவில் கும்பாபிஷேகம் அடுத்தமாதம் நடத்தியாக வேண்டும். வேலை கெதியாகப் போகட்டும்" என்று அதட்டினார் கோவில் மனேஜர்.

'இன்னும் இரண்டு வாரத்தில் இந்த வீட்டுக்குக் குடிவந்து விடலாமல்லவா?" என்று பென்ஷனர் மனைவி தன் புருஷனைக் கேட்டாள்.

கிணற்றடியில் அம்மாக்கள் மூன்றாவது தடவையாக முகத்துக்கு "சோப்" போடத் தொடங்கினார்கள். ★

# பாடசாலைகள், கழகங்களின் உதைபந்தாட்ட வீரர்களுக்கு மைதான ஒழுக்கம் அவசியம்

சர்வதேச மட்டத்தில் தற்போது பல கோடி ரூபாக்களை வருமானமாக அள்ளித்தரும் ஒரு பிரதான விளையாட்டாக உதைபந்தாட்டம் விளங்கி வருகின்றது.

உலகளாவிய ரீதியில் மிகவும் விறுவிறுப்புள்ளதாகவும் சுறுசுறுப்புமிக்கதாகவும் இந்த உதைபந்தாட்டம் காணப்படுகின்றமையால் அதற்கென ஒரு தனி 'மகவு' உள்ளது.

இதன் காரணமாகச் சர்வதேச ரீதியில் பல பிரபல்யமான உதைபந்தாட்டக் கழகங்கள் இப்போது முளைத்து வருகின்றன. அந்த அளவுக்கு இதனால் வருமானம் அதிகரிக்கின்றமையே இதற்குக் காரணம்.

சர்வதேச உதைபந்தாட்டக் கழகங்களில் அங்கம் வகிக்கும் வீரர்களின் வருடாந்த ஊதியம் கோடி ரூபாய்களையும் தாண்டியிருக்கின்றது.



பிரபலமான வீரர்களைத் தமது அணிக்காக ஒப்பந்தம் செய்வதில் கழகங்கள் போட்டி போட்டுக்கொள்கின்றன. இந்தப் போட்டிகளை அவர்களின் ஒப்பந்தத் தொகையே தீர்மானிக்கிறது.

இந்நிலையில் உதைபந்தாட்டம் இலங்கையிலும் பிரபல்யம் மிக்க வருமானம்மிக்க விளையாட்டாக உள்ளது. இதன் மூலம் பல வாய்ப்புகள் மற்றும் வசதிகளை தென்னிலங்கையில் உள்ள வீரர்கள் இப்போது பெற்று வருகின்றனர்.

குடாநாட்டிலும் உதைபந்தாட்டம் பிரபல்யம்மிக்க விளையாட்டு. பாடசாலைகள் முதல் கழகங்கள் வரை இந்த விளையாட்டு பெயர் பெற்றதாக உள்ளது.

பல திறமைமிக்க உதைபந்தாட்ட வீரர்கள் குடாநாட்டில் உள்ள அணிகளில் உள்ளனர். ஆயினும் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் இவர்கள் தமது திறமைகளை வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பங்கள் எதுவும் இதுவரை கிடைக்காமல் போனமை வேதனைக்குரிய விடயம்.

குடாநாட்டில் தற்போது மூன்று உதைபந்தாட்ட லீக்குகள் இயங்கி வருகின்றன. யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட லீக், பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக், வலிகாமம் உதைபந்தாட்ட லீக் ஆகிய மூன்றுமே அவை.

பாடசாலைகள், கழகங்களின் உதைபந்தாட்ட வீரர்களுக்கு மைதான ஒழுக்கம் மிக அவசியம்

தேசிய, சர்வதேச ரீதியில் பிரகாசிக்க இவை உதவும்.

இதில் யாழ்ப்பாணம், பருத்தித் துறை லீக்குகள் கொழும்பில் உள்ள உதைபந்தாட்டச் சங்கத்துடன் பதிவு களை கொண்டுள்ளன. வலிகாமம் உதைபந்தாட்ட லீக் கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக கொழும்பில் உள்ள சங்கத்துடன் பதிவை மேற்கொள்வதற்குப் பல முயற்சிகளை எடுத்த போதிலும் இதுவரை அது வெற்றியளிக்கவில்லை.

இந்த மூன்று லீக்குகளிலும் சுமார் நூறுக்கும் மேற்பட்ட கழகங்கள் இணைந்துள்ளன. லீக்குகள் மூலம் கழகங்களுக்குப் பல ஒழுக்கக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. ஆயினும் ஒரு சில கழகங்கள் மட்டும் விளையாட்டு மைதானத்தில் குழப்பங்களை உண்டாக்கி அடிதடியில் ஈடுபடும் சம்பவங்கள் ரசிகர்களை வருத்தத்திற்குள்ளாக்குவதுடன் விளையாட்டின் புனிதத் தன்மையை மாசுபடுத்துவதும் வேதனைக்குரிய விடயமாக உள்ளது.

## தேசிய, சர்வதேச ரீதியில் பிரகாசிக்க இவை உதவும்

யாழ்ப்பாணத்தில் வருடம் முழுவதும் ஏதோ ஒரு மூலையில் ஏதோ ஓர் உதைபந்தாட்டப் போட்டி நடந்து கொண்டுதான் இருக்கின்றது.

கழகங்கள் குறிப்பிட்ட பணத்தை பார்வையாளர்களிடம் இருந்து அறவிட்டுக் கொண்டும் வர்த்தக நிறுவனங்களை அனுசரணையாளராகப் பெற்றும் போட்டிகளை நடத்தி வருகின்றன. ஆயினும் இதனால் விளையாட்டு வீரர்களுக்கு வருமானம் எதுவும் கிடைப்பதில்லை என்பது இங்கு சுட்டிக்காட்டப்படவேண்டிய மிக முக்கியமான விடயமாகும்.

கழகங்களில் விளையாடும் வீரர்களைப் பொறுத்தவரையில் 75 வீதமானவர்கள் பாடசாலை மட்டத்தில் உதைபந்தாட்டத்தின் விதிகளைக் கற்று வெளிக்கொண்டு வரப்பட்ட வீரர்கள் அல்லர். இதனால் இவர்களிடம் விளையாட்டு தொடர்பான சட்ட ஒழுங்கு விதிகள் பற்றிய அறிவு குறைவாகவே காணப்படுவதாகச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

உதைபந்தாட்டம் பற்றிய சட்ட விதிகள், நுணுக்கங்கள் பற்றி அறியாமல் வீரர்கள் விளையாட்டிற்காக மைதானத்தில் இறங்குவது பொருத்தமானதல்ல. இதனால்தான் மைதானத்தில் குழப்பங்கள் உருவாகின்றன. இதன் காரணமாக உதைபந்தாட்டத்தையே வெறுக்கச் செய்யும் சம்பவங்களும் நடைபெறுகின்றன.

குழப்பத்தில் ஈடுபடும் வீரர்களுக்குப் பின்னால் ஆதரவாளர்கள் என்று கூறிக் கொள்கின்ற ஒரு சிலர் குழப்பத்தில் மகிழ்ச்சி காண்பதனால் தான் இந்தக் குழப்பத்தைக் கட்டுப்படுத்த முடியாத நிலை தோன்றுகின்றது.

கழக மட்டங்களில் மட்டும்தான் இவ்வாறான குழப்பங்கள் ஏற்படுகின்றன என்று கூறிவிட முடியாது. பாடசாலை மட்டப் போட்டிகளிலும் இத்தகைய நிலை இப்போது உருவாகியிருக்கின்றது. இவற்றைப் பெரும்பாலான உதைபந்தாட்ட ரசிகர்களும் அறிந்திருப்பார்கள்.

## குடாநாட்டு விளையாட்டரங்குகளில்

கடந்த இரண்டு மாதத்துக்குள் இடம்பெற்ற வலிகாமம் கல்விவலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு இடையேயான உதைபந்தாட்டப் போட்டி ஒன்றில் குறித்த பாடசாலை ஒன்று தோல்வியடைந்தது. இதனையடுத்துப் போட்டி மத்தியஸ்தர் ஒருவர் அந்தப் பாடசாலையின் ஆசிரியர் ஒருவரால் தாக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவ்வாறான நடவடிக்கைகள் உதைபந்தாட்டப் போட்டிகளில் கடந்த சில வருடங்களாக இடம்பெற்று வருகின்றமையும் சுட்டிக்காட்டப்பட வேண்டியுள்ளது. இதற்கான ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை காரணமாக இந்தக் குழப்பங்கள் தற்போது ஒரு கலாசாரமாக உருவாகி வருவது கண்டு பலரும் அதிர்ச்சியும் விசனமும் வெளியிட்டுள்ளனர்.

இந்தக் கலாசாரத்தை முளையிலேயே அதாவது பாடசாலை மட்டத்திலேயே கிள்ளி எறிய வேண்டிய தேவை இப்போது எழுந்துள்ளது.

இது இப்படியே தொடர்ந்தால் பாடசாலை மட்டத்தில் வளர்க்கப்படும் உதைபந்தாட்ட வீரர்கள் வெகுவிரைவில் தமது விளையாட்டுத் திறமையை வெளிப்படுத்தும் தன்மையைக் கைவிட்டு 'சண்டித்தனம்' மூலம் வெற்றிபெறும் நடவடிக்கைகளிலேயே ஈடுபடுவார்கள். இது எதிர்காலத்தில் பெரும் ஒழுக்கக்கேடான கலாசாரத்தையும் அபகீர்த்தியையும் கொண்டுவரும்.

எனவே வளர்ந்து வரும் உதைபந்தாட்டத்திற்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து தேசிய மட்டத்தில் [illegible] வீரர்களை உருவாக்க வேண்டிய பொறுப்பு குடாநாட்டு உதைபந்தாட்ட வீரர்கள், பாடசாலை சமூகத்தினர், ஆதரவாளர்கள், ரசிகர்கள் ஆகியோருக்கு உண்டு.

உதைபந்தாட்ட வீரர்கள் தமது கடமைகள், பொறுப்புகளை உணர்ந்து உரிய பயிற்சிகளை உரிய வீரர்களுக்கு வழங்கி ஒழுக்கமான விளையாட்டாக உதைபந்தாட்டத்தை மாற்றவேண்டும். இதன் மூலம் தேசிய மட்டத்தில் எமது வீரர்கள் பிரகாசிக்கக்கூடிய நிலை உருவாகும்.



இதே போன்று பாடசாலைகளும் தமது வீரர்களுக்கு விளையாட்டின் ஒழுக்கவிதிகளைக் கற்பிக்கவேண்டும். மைதானத்தில் குழப்பத்தில் ஈடுபடுவதைத் தவிர்த்துக்கொள்ள உரிய ஆலோசனைகளை வழங்க வேண்டும்.

விட்டுக் கொடுப்பு, வெற்றி தோல்வியை ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மை போன்ற நல்ல பழக்கவழக்கங்களை மாணவர்களுக்குப் பழக்கி அடிதடியற்ற விளையாட்டு அணியை உருவாக்க வேண்டும். இதன் மூலம் தேசிய மட்டத்தில் வீரர்கள் தமது திறமைகளை வெளிப்படுத்த முடியும்.

இதற்கு உதாரணமாக கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி நூற்றாண்டு விழாவை யொட்டி நடத்திய உதைபந்தாட்டப் போட்டியை அழைக்கப்பட்ட பாடசாலை அணி களைக் கொண்டு மிகவும் சிறந்த முறையில் எந்தவிதமான பிரச்சினைகளும் இன்றி நடத்தி முடித் துள்ளது. இது பாராட்டத்தக்கதும் வரவேற்புக்குரியதுமாகும்.

எதிர்காலத்தில் அழைக்கப்பட்ட பாடசாலைகள், கழகங்கள் என்ற நிலைமை மாறி அனைவரையும், எங்கும், எப்பொழுதும் அழைத்து விளையாடும் நிலைமைக்கு அனைத்து விளையாட்டு அணிகளும் முன்னேறவேண்டும். இதற்கு ஆண்கள் செய்யவேண்டியது விட்டுக் கொடுப்பு, வெற்றி தோல்வியை சமமாக ஏற்றுக் கொள்ளுதல் என்னும் மனநிலையை வளர்த்துக் கொள்வதே.

எனவே அவர்கள் அதனை விரைவில் செய்தால் உதைபந்தாட்டம் குடாநாட்டில் ஓர் ஒழுக்கமான விளையாட்டாக மிளிர்வதுடன் எமது வீரர்கள் தேசிய, சர்வதேச மட்டத்தில் சிறந்து விளங்கக்கூடிய நிலை தோன்றும். ★

**விண்ணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்றாண்டு விழாக்காணும் பள்ளியைப்
பாராட்டி வாழ்த்துகின்றோம்

## யாழ்.நீர்வேலி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை

நூற்றாண்டு காண்கிறது.

*பலநூறு மாணவர்களின் அறிவுக் கண் திறந்து*
*நமது தேசத்தின் வளர்ச்சிக்கும்*
*சமுதாய வளர்ச்சிக்கும் - அடித்தளமிட்டு*
*இன்று நூற்றாண்டு காண்கிறது*
வாழ்த்துகிறோம்....

நீர்வேலி றோ.க.த.க.பாடசாலையில் ஆரம்பக் கல்வியைப் பயின்ற நான் இன்று நூற்றாண்டு காணும் பள்ளியைப் புலத்தில் இருந்து வாழ்த்துகிறேன்.

இவ்வேளையில் அங்கு பணிபுரியும் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் கல்வி பயிலும் மாணவர்கள் அனைவரையும் வாழ்த்துகின்றேன்.

மேலும் மேலும் பல நூறு ஆண்டுகள் இப்பாடசாலை விழாக் காண வேண்டும் என எமது குடும்பத்தின் சார்பில் வாழ்த்துகிறேன்.

*சிவசுப்பிரமணியம் கிருபாகரன்*
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.
(ஜேர்மனி).


## புதிய குடும்ப அட்டை விநியோகம்

யாழ்ப்பாணம்,ஜூலை 8

யாழ்ப்பாணம் ஜே/80 கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த குடியிருப்பாளர்களுக்கான புதிய குடும்ப அட்டைகள் விநியோகிக்கப் படவுள்ளன.

எதிர்வரும் 13ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 9 மணி தொடக்கம் பகல் 12 மணிவரை பெருமாள் கோயில் தெற்கு வீதியில் உள்ள மண்டபத்தில் வைத்து புதிய குடும்ப அட்டைகள் விநியோகிக்கப்படவுள்ளதாக ஜே/ 80 கிராம அலுவலர் தெரிவித்தார்.

(1-111)


கற்சுமி வெளியீடு

தரம் 1 முதல் O/L வரை தெளிவான கணனிஅச்சமைப்பில் இரண்டாம் தவணைப் பரீட்சை வினாத்தாள்களைப் பெறலாம்.

(62526)

கற்சுமி கல்வி நிறுவனம்
166, நாவலர் வீதி, யாழ்.


## தென்மராட்சிப் பாடசாலைகளுக்கு நாட்டுக் கூத்துப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 8

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான வலய மட்ட நாட்டுக்கூடத்துப் போட்டிகள் எதிர்வரும் 14, 22 ஆகிய திகதிகளில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 14ஆம் திகதி காத்தவராயன் மற்றும் விசேட சிந்து நடைக் கூத்துக்களும், 22ஆம் திகதி இசை நாடகங்களும் (வட மோடி, தென்மோடி) மேடையேற்றப்படவுள்ளன.

போட்டிகளில் பத்து பாடசாலைகளைச் சேர்ந்த 12 கூத்துக்களும் மேடையேற்றப்படவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்துள்ளார். (207)

# 14 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் சிதம்பரி மகேந்திரன்

(முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர்)

தோற்றம் 12-03-1941 | மறைவு 08-07-1993


காலங்கள் பல கடந்தாலும் உங்கள்
கனிவான பாசமுகம் என்றும் எம் நினைவில் - நின்றாடும்.
காலக் குப்பையில் அழியாத அன்புருவாகத் திகழும்
மணம் வீசும் புத்தம் புது மலராக என்றும்
விளங்குகின்றீர்கள்

*உடுவில் கிழக்கு,*
*சுன்னாகம்.*

(62532)

குடும்பத்தினர்.

# ஈரவிழிகளுடன் ஈராண்டு



## திருமதி ஈவ்லின் நிர்மலாதேவி இராஜநிமலன் அம்பலவாணர்

*தாயின் மடியில்* *19.11.1960*
*இறைவன் அருகில்* *08.07.2005*

ஈராண்டு ஆனதம்மா! ஆறவில்லை எம் இதயம்!
பாதி வயதினிலே பாரினில் வாழ்ந்தது போதுமென்று
காலனவன் உங்களைக் கவர்ந்தது ஏனோ?
பிஞ்சுப் பாலகனையும் பாரினில் தவிக்கவிட்டு
பாருலகம் சென்றீர்களே அம்மா!
அம்மா என்று அழைக்க உங்களைப் போல்
தெய்வம் இவ் உலகில் யாருண்டு அம்மா!
இவ்வுலகில் இப்பிறப்பில் மட்டுமல்ல
எப்பிறப்பிலும் எமக்கு அம்மாவைப் போல் நிகர் ஏதும் இல்லை!
இப்பிறப்பில் மட்டுமில்லை எப்பிறப்பிலும்
உங்கள் அன்பு எம்மில் நிலை பெற்றிருக்க வேண்டும்
என்று தினம் தினம் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்!
*சாந்தி! சாந்தி! சாந்தி!*

முதலாம் வட்டாரம்,
புங்குடுதீவு.

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

(62529)


# MEDICAL DEGREE




Recognized by SRI LANKA MEDICAL COUNCIL
WHO/GMC-UK & OVER 150 COUNTRIES

கருத்தரங்கு மற்றும் உடன் அனுமதிக்கால அட்டவணை
கொழும்பு: பார்க் அக்கடமி 22.07.2007 மு.ப. 10 மணி
பார்க் அக்கடமி 29.07.2007 மு.ப. 10 மணி
மாவனல்லை: பதுரியா மத்தியகல்லூரி - 23.07.2007 மு.ப. 11 மணி
கண்டி:- சுவிஸ்லோ ஹோட்டல் - 24.07.2007 மு.ப. 10 மணி

இன்றே பதிவு செய்துகொள்ளுங்கள்!
உடனடியாகவே கல்விநெறியில் இணைந்து கொள்ளுங்கள்!!

PATHE ACADEMY
Overseas Student Placement Department
37, School Lane(Entrance from Duplication Rd) Colombo 03.
Tel:5377752, 2502012, 2591271 www.patheacademy.org


# மரண அறிவித்தல்கள்



## திருமதி பூதத்தம்பி இராசம்மா

பாலாவி தெற்கு, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி பூதத்தம்பி இராசம்மா 06.07.2007 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா-நல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் பூதத்தம்பியின் அன்பு மனைவியும், அமரர் சிவராசா மற்றும் செல்வராசா (சுவிஸ்), செல்வராணி (தாதி, சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலை), இந்திராணி ஆகியோரின் அன்புத்தாயும், சியாமளா, யசோதா, அன்றூ, கிருஷ்ணசாமி ஆகியோரும் அன்பு மாமியாரும், கஜன், நகுசன், வைஷ்ணவி, அபிவர்ணா, அபிதா, அபிராமி, வைகுந்தன், லாவண்யன், சுரேகா, ஜானு, கபில் ஆகியோரின் அன்புப் பேத்தியும் சுவகுரு, அருணாசலம், செந்தில்வேல், அன்னலட்சுமி, அமரர் நவரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.07.2007.) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பாலாவி இந்து மயானத்தில் எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பாலாவி தெற்கு,
கொடிகாமம்.

(62534)

தகவல்:
குடும்பத்தினர்.



## திருமதி அப்புத்துரை நேசம்மா

சபாபதிவீதி, கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் அம்பகர்வீதி, கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அப்புத்துரை - நேசம்மா செவ்வாய்க்கிழமை (03.07.2007) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு-சின்னப்பிள்ளை தம்பதியரின் சிரேஸ்ட புத்திரியும், அப்புத்துரையின் பாசமிகு மனைவியும், அருள்காந்தன் (சிரேஷ்ட விரிவுரையாளர், மிருகவைத்தியம்-பேராதனை பல்கலைக் கழகம்), சிறிகாந்தன் (வவா-பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத்தாயாரும் காலஞ்சென்ற தங்கம்மா, கதிரமலை, நீலாம்பிகை ஆகியோரின்அன்புச் சகோதரியும் பொன்னுத்துரை, காலஞ்சென்ற சிங்கராசா ஆகியோரின் மைத்துனியும், தயானந்தன், றஜிதா, சுயாதா, சுஜிதா, சுதாகரன், பார்த்தீபன், சுபாசினி, ஜெகதீபன், ஜெகதீசன், தர்மினி ஆகியோரின் பெரியம்மாவும், நடேசப்பிள்ளை, லோகநாதன், வவிலோகநாதன் யோகேஸ்வரன், சர்மிளா, அமிர்தா,அகிலா, யூடிசுதர்சினி ஆகியோரின் மாமியும், தங்கராசாவின் பாசமிகு மச்சாளும், றணுசியா,நிதுஷா, நிகிலா, ஷைந்தவி, திவ்வியபிரியன், தனுஷன், சுசீனா ஆகியோரின் பாசமிகு பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.07.2007) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணிக்கு நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அம்பகர் வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
தொலைபேசி இல: 0212225420

(62518)

தகவல்:
அப்புத்துரை (கணவர்),
அருள்காந்தன்,சிறிகாந்தன்.
(பிள்ளைகள்).



## அந்தோனி அருளப்பு

(ஓய்வுபெற்ற மதுவரித் திணைக்கள பரிசோதகர்)

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனி அருளப்பு 05.07.2007 வியாழக்கிழமை நுவரெலியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனி (குழந்தை) -ஆனாசி தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிதம்பரி-அன்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் செல்லம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற மேரிதிரேசா, காலஞ்சென்ற மேரிறோசலின் ஆகியோரின் அருமைச் சகோதரனும், கந்தையா (ஓய்வுபெற்ற சிறைச்சாலை உத்தியோகத்தர்), இராசமணி ஆகியோரின் அன்பு மைத்துனரும், சந்திரபாபு (விவசாய ஆராய்ச்சியாளர்), இராஜேந்திரபாபு, கசில்டா நஞ்சினி (கஸ்தூரி), இரவீந்திரபாபு, சுரேந்திரபாபு ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவறதி (ஆசிரியை -நுவரெலியா), எலிசபெத், தனபாலசிங்கம், ஜீவனா, அருட்தந்தை க.அருள்நேசன் ஆகியோரின் அன்பு மாமனும், எமிலின், அருளின், அன்ரலின், டிலானி, பஸ்ரியன், பிறிசற், செற்றிக் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (08.07.2007) பிற்பகல் 2.30 மணியளவில் நுவரெலியா சென்சேவியர் சேமக்காலையில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*விவ்சாய ஆராய்ச்சியாளர்,*
*சீத்தாலிய,*
*நுவரெலியா.*

(62523)

தகவல்:
*அ.சந்திரபாபு (மகன்).*

## செல்லர் பாலசிங்கம்

வைரவகோயிலடி, பத்தமேனி, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லர் பாலசிங்கம் 01.07.2007 ஞாயிற்றுக்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் இராசாத்தியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான செல்லர்-லட்சுமிப்பிள்ளை தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை வள்ளியம்மை தம்பதியரின் வளர்ப்பு மகனும் இராஜஜீவா (பிரான்ஸ்), ஜீவராஜா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான முருகேசு-சின்னமணி தம்பதியரின்அன்பு மருமகனும் ஜெயக்குமாரின் அன்பு மாமனாரும் துரைசிங்கம், இரத்தினசிங்கம், தர்மகுலசிங்கம் (சுவிஸ்), புவிராஜகுலசிங்கம் (சுவிஸ்), குமாரகுலசிங்கம் (வவுனியா), விஜயகுலசிங்கம் (பிரான்ஸ்), இராஜகுலசிங்கம் (பிரான்ஸ்), காலஞ்சென்ற இராஜகுமாரி, ஜெயவீரசிங்கம் (பிரான்ஸ்), சிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் இராசறதி (ஜேர்மன்), இராஜகுலம் (இத்தாலி), பத்மாவதி (இத்தாலி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.07.2007) திங்கட்கிழமை பிரான்ஸில் நடைபெறும். அன்றைய தினம் பத்தமேனி, வைரவர் கோயில், அச்சுவேலி என்னும் முகவரியில் உள்ள அவரது இல்லத்தில் துக்கம் அனுஸ்டிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வைரவர் கோயிலடி, பத்தமேனி,*
*அச்சுவேலி.*

(62531)

தகவல்:
*இரத்தினசிங்கம் (ரத்தி).*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# நெருப்பாறுகளை நீந்தி கடக்க வேண்டிய ஊடகங்கள்

இலங்கையில் ஊடகவியலாளர்களின் மோசமான நிலைமை குறித்து அப்பட்டமாக அம்பலப்படுத்தியிருக்கின்றார் சுதந்திர ஊடக இயக்கத்தின் அமைப்பாளர் சுனந்த தேசப்பிரிய. கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்திருக்கின்றார்.

* *ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகங்களுக்கு எதிரான அச்சுறுத்தல் புலிகள் தரப்பிலிருந்தும் பார்க்க அரசுத் தரப்பு மற்றும் அரசுப் படைகள் தரப்பிலிருந்தே பெரும்பாலும் வருகின்றன.*
* *அரசையும் படை நடவடிக்கைகளையும் விமர்சிக்கும் ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு 'துரோகி' பட்டம் குத்தப்படுகின்றது.*
* *அரச படையினர் ஊடகவியலாளர்களைத் தாக்கும் போது அரச சார்பு ஆயுதக் குழுக்களும் அதனையே பின் பற்றலாம் என்ற அச்சம் எழுந்துள்ளது.*

- இவை அவர் குறிப்பிட்டுள்ள முக்கிய அம்சங்கள்.

இலங்கையில் பொதுவாக ஊடகவியலாளர்கள் நெருக்கடிகளை இன்று எதிர்நோக்குகின்றார்கள். எனினும் தமிழ் ஊடகவியலாளரின் நிலையோ மோசம். அதுவும் யாழ்.குடாநாட்டில் பணியாற்றும் - எஞ்சியுள்ள - ஒரு சில ஊடகவியலாளர்களின் நிலைமையோ கூறத் தேவையில்லாத ஒன்று. மிகுந்த இக்கட்டுக்குள் சிக்கிக் கொண்டு, வரலாற்றுப் பணியை அவர்கள் ஆற்றிக் கொண்டிருக்கின்றார்கள்.

இலங்கையில் பெரும்பான்மை இனத்தவரான சிங்களவர்களுக்கும் சிறுபான்மையினத்தவரான தமிழர்களுக்கும் இடையிலான தேசிய இனப்பிரச்சினையே இன்று பெரும் உள்நாட்டுப் போராக வெடித்திருக்கின்றது.

ஒரு புறம் சிங்கள அரசின் சிங்களப் படை. தமிழர்களை ஒரு சதவீதம் கூடக் கொண்டிராத பேரினவாதப் படையாக அது திகழ்கின்றது. மறுபுறம் தமிழ்த் தேசியத்தை - தமிழர் தேசத்தை - பிரதிநிதித்துவப்படுத்தும் விடுதலைப் புலிகள் அமைப்பு. முற்றும் முழுதாகத் தமிழரின் விடுதலைப் படையாக அது மிளிர்கின்றது.

இவ்வாறு சிங்களவர் தேசத்துக்கும் - சிங்களவர் படைக்கும் - மறுபக்கத்தில், தமிழர் தேசத்துக்கும் - புலிகளின் படைக்கும் - இடையிலான பெரும் போராக இன யுத்தம் இலங்கைத் தீவில் கட்டவிழ்வது கண்கூடு.

இந்த யுத்தமுனையில் தமிழர் தரப்பின் நலன்களைப் பிரதிபலிக்கும் தமது தலையாய இனக் கடமையைத் தமிழ் ஊடகவியலாளர்கள் மேற்கொண்டுள்ளனர். இதன் காரணமாகப் பல சமயங்களில் சிங்களப் படைகளின் அத்துமீறல்கள், அட்டகாசங்கள், அபத்த வேலைகள், அவல நடவடிக்கைகள் போன்றவற்றை அம்பலப்படுத்தும் பொறுப்பும் அவர்கள் மேல் விழுந்து விடுகின்றது. இதை அவர்கள் நிறைவேற்றும்போது இக்கட்டுக்கும் இன்னலுக்கும் ஆளாக்கப்படுகின்றார்கள்.

வழமையாகவே தன்னை மோசமாக விமர்சிப்போரை 'துரோகி'யாக முத்திரைகுத்தும் அரசுத் தரப்பின் முன்னால் தமிழ் ஊடகவியலாளர்கள் அனைவரும் - அவர்கள் தமிழர் தேசத்தின் விடுதலை எழுச்சியைப் பிரதிபலிக்கும் காரணத்தால் - துரோகிகளாகவே அடையாளம் காணப்படுகின்றனர்.

இந்தக் காரணத்தால்தான் தமிழ் ஊடகவியலாளர்கள் இன்று பெரும் அசௌகரியத்துக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள்.

இலங்கைத் தீவில் மண்ணின் மைந்தர்களான தமிழர்கள் ஒவ்வொருவரையும் அந்நிய அடிமையாக - இரண்டாம் தரக் குடிமகனாக - கருதி அவர்களை அடக்கி, ஒடுக்கி அடிமைப்படுத்த முயலும் சிங்கள அரசு, அத்தகைய தமிழர்களின் கருத்துக் குரல்களாக ஒலிக்கும் ஈழத்தமிழ் ஊடகவியலாளர்களை மோசமான அந்நியர்களாக - எதிரிகளாக - கருதி அவர்களை அடிமைப்படுத்த முனைவதில் வியப்பில்லை.

சாதி, மத, வர்க்க பேதங்களையும் உயந்தோர், தாழ்ந்தோர் என்ற வேறுபாடுகளையும், குறுகிய அரசியல் கருத்து முரண்பாடுகளையும் ஒருபுறம் ஒதுக்கித் தள்ளிவிட்டு, விடுதலைக்காகக் கிளர்ந்தெழுந்துள்ள ஒரு தேசமாக - தேசியமாக - தமிழ் இனம் ஐக்கியப்பட்டு எழுச்சி பெற்று நிற்கின்றது.

ஒரு தேச உயிர்ப்பின் முகிழ்வை வழிப்படுத்தும் இந்த வரலாற்றுத் திருப்புமுனைக் கட்டத்திலே மக்கள் குரலாக ஒலிக்கும் ஊடகங்களினதும் ஊடகவியலாளர்களினதும் பங்கு பணி அளப்பரியது; அளவிடமுடியாதது. இந்த வரலாற்றுப் பொறுப்பை வெற்றிகரமாக சாதித்து முடிப்பதற்காக ஊடகங்களும் ஊடகவியலாளர்களும் இன்னும் பல நெருப்பாறுகளை நீந்திக் கடக்க வேண்டியிருக்கும். தம் மக்களின் பேராதரவு என்ற உற்சாகத்தை உள்வாங்கி அந்தச் சாதனையை நமது ஊடகத்துறை ஈட்டும் என்று நம்பலாம்.

# கல்வியியற் கல்லூரி டிப்ளோமாதாரிகளுக்கு ஆசிரிய நியமனம் வழங்கும் பணி நிறுத்தம்!

## மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் தகவல்

திருகோணமலை,ஜூலை8

கல்வியியற் கல்லூரிகளின் டிப்ளோமாதாரிகளுக்கு ஆசிரிய நியமனம் வழங்கும் பணியை நிறுத்துமாறு மத்திய கல்வியமைச்சு, வடக்கு மாகாண கல்வியமைச்சை அறிவுறுத்தி உள்ளது.

வடக்கு மாகாண சபைக்குட்பட்ட பாடசாலைகளில் டிப்ளோமாதாரிகளை நியமிப்பதற்காக நேர்முகப்பரீட்சை நடத்தப்பட்டது.

நேர்முகப்பரீட்சைக்கு தோற்றிய 322 பேருக்கும் கடந்த மாதம் 4ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் நியமனம் வழங்க மாகாணக் கல்வி அமைச்சு ஏற்பாடு செய்திருந்தது.

ஆனால் -

பிரஸ்தாப டிப்ளோமா தாரிகளை நியமிப்பதற்கான அறிவுறுத்தல் திறைசேரியில் இருந்து கிடைக்கவில்லை என்றும் -

எனவே, நியமனம் வழங்கும் பணியை நிறுத்திவைக்குமாறும்- கல்வி அமைச்சில் இருந்து அறிவுறுத்தல் கிடைத்துள்ளது என்று மாகாண கல்வியமைச்சின் செயலாளர் என்.இளங்கோவன் உதயனுக்குத் தெரிவித்தார்.

மத்திய கல்வி அமைச்சின் இருந்து அறிவுறுத்தல் கிடைத்தபின்னரே இனி நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (அ-1)

# ஆவரங்காலில் சுடப்பட்டவரின் மகன் கடத்தப்படவில்லை

## விசாரணையில் மனைவி நேற்றுத் தகவல்

ஆவரங்காலுக்கும் அச்சுவேலிக்கும் இடையில் நேற்றுமுன்தினம் சுட்டுக் கொல்லப்பட்ட அ.சிவகுமாரின் மகன் கடத்தப்படவில்லை என்று அவரது தாயார் மல்லாகம் நீதிமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார்.

'வதிரி, நாவலடியைச் சேர்ந்த அமுர்தலிங்கம் சிவகுமார் என்பவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக மல்லாகம் நீதிவான் திருமதி. ச. இளங்கோவன் நேற்று மரண விசாரணைகளை நடத்தினார்.

கொல்லப்பட்ட சிவகுமாரின் மனைவியான சுதர்சனா சாட்சியம் அளிக்கையில் -

தனது கணவர் மோட்டார் சைக்கிளில் தனியாகச் சென்றார். பிள்ளைகள் எவரும் அவருடன் செல்லவில்லை - என்று தெரிவித்துள்ளார்.

தமது கணவர் லயன்ஸ் கழகத்தின் உறுப்பினராகவும் கல்யாணத் தரகராகவும் இருந்தார் என்றும் அவர் கூறினார்.(அ-1)

# கூட்டுறவுச் சபையினர் நேற்றுச் சிரமதானப் பணி

சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபையினர் நேற்று சிரமதானப் பணியில் ஈடுபட்டனர். சபையின் பணியாளர்கள் ஒன்று சேர்ந்து கூட்டுறவுச் சபையின் வீரசிங்கம் மண்டப சுற்றாடல் பகுதியை சிரமதானம் மூலம் துப்புரவு செய்தனர்.

இந்தப் பகுதிகளில் அடர்ந்து வளர்ந்திருக்கும் புல்பூண்டு மற்றும் பற்றைகள் என்பன வெட்டி அழிக்கப்பட்டன. (அ-224)

# சாவகச்சேரியில் தேநீர்க் கடை உரிமையாளர் வெள்ளி மாலை கடத்தப்பட்டுக் கொலை

யாழ்ப்பாணம்,ஜூலை8

சாவகச்சேரி நகரப் பகுதியில் டச்சு வீதியில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாலை தேநீர்க்கடை உரிமையாளர் ஒருவர் கடத்தப்பட்டு இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

சாவகச்சேரி, சங்கத்தானை முருகமூர்த்தி கோவிலடியைச் சேர்ந்த விஜயகுமார் சதீஸ்குமார்(வயது 22) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவர் ஆவார்.

அவர், டச்சு வீதியில் உள்ள தமது வர்த்தக நிலையத்தை மூடிவிட்டு வீடு திரும்புகையில், மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் இவரைக் கடத்திச் சென்று கிராம்புவில் பகுதியில் வைத்துச் சுட்டுக்கொன்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

மேசன் வேலை செய்துவந்த இவர், தற்போது சிமெந்து தட்டுப்பாடு காரணமாக வேலைகள் இல்லாததால் பதினைந்து தினங்களுக்கு முன்னர் சாவகச்சேரி டச்சு வீதியில் தேநீர் கடை ஆரம்பித்து வியாபாரம் நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது. (அ-1-207)

# யாழ்.நகரப் பகுதியில் படையினர் குடும்பப் பதிவு பத்திரம் விநியோகம்

யாழ்ப்பாணம்,ஜூலை8

யாழ்.நகரப் படைப்பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் வசிக்கும் மக்களுக்கு படையினரால் குடும்பப் பதிவு அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

கிராம சேவையாளர்கள் ஊடாக படிவங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

512ஆவது படைப்பிரிவின் கட்டுப்பாட்டுப் பகுதிகளான கிராம அலுவலர் இல. ஜே/80, ஜே/81, ஜே/83 பிரிவுகளில் வதியும் குடியிருப்பாளர்களின் குடும்ப விவரங்கள் குறித்த பதிவுகள் தற்சமயம் நடைபெற்றுவருகின்றன.

குறிப்பிட்ட பகுதிகளில் வதியும் குடியிருப்பாளர்கள் அதற்கான படிவத்தில் பெயர், உறவு முறை, அடையாள அட்டை இலக்கம், தொழில் ஆகிய விவரங்களுடன் வெளிநாடுகளில் வதியும் தமது குடும்ப உறுப்பினர் தொடர்பான விவரங்களையும் பதிவு செய்து தமது பகுதி கிராம அலுவலரிடம் கையளிக்க வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளனர்.

ஒவ்வொரு குடும்பத்தினர் சுமார் 5 படிவங்கள் வரை பூர்த்தி செய்தல் வேண்டும். இதுவரை குறிப்பிட்ட பதிவுகளை மேற் கொள்ளாதவர்கள் உடனடியாக தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (அ-111)

# மல்லாகத்தில் மிதிவெடியில் சிக்கிய சிப்பாய் காலில் காயமுற்றார்

யாழ்ப்பாணம்,ஜூலை8

மல்லாகம் காங்கேசன் வீதியில் 7ஆம் கட்டையில் நேற்று நண்பகல் 1.45 மணியளவில் மிதிவெடியில் சிக்கி இராணுவச் சிப்பாய் ஒருவர் காலில் காயமுற்றார்.

அந்தப் பகுதியில் உள்ள மரக்காலை ஒன்றுக்கு முன்பாக வெட்டப்பட்ட வேலி ஒன்றில் வைக்கப்பட்டிருந்த மிதிவெடியில் இவர் சிக்கினார்.

மிதிவெடியில் சிக்கிய இவர் காலில் காயமுற்றார் என்றும் -

உடன் பலாலி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தை அடுத்து அந்தப் பகுதியில் படையினரின் தேடுதல் இடம்பெற்றது. அதனால் பதற்ற நிலை காணப்பட்டது.

அதேவேளை-

மல்லாகம் சந்தியில் உள்ள பஸ் நிலையத்தில் பஸ்ஸுக்கு காத்திருந்த தனியார் மினிபஸ் சாரதி ஒருவர் படையினரால் கூட்டிச் செல்லப்பட்டதாகக் கூறப்பட்டது. (அ-1-68)

# கிழக்கிலிருந்து தமிழர்களை விரட்டுவதற்கு....

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

### தமிழர்களைத் தமிழர்களே வெளியேற்றிய கைங்கரியங்களும் உண்டு

சிங்களக்குடியேற்றங்கள் உருவான காலத்தில் தமிழர்களைத் தமிழர்களே வெளியேற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்ட கைங்கரியங்களும் உண்டு. இதற்காகச் சங்கங்களை அமைத்து யாழ்ப்பாணத் தமிழர்களை வெளியேற்றும் நடவடிக்கையில் சில தமிழர்கள் ஈடுபட்டனர்.

இந்தச் சங்கங்கள் யாழ். அகற்றுச் சங்கம் என அழைக்கப்பட்டன. மட்டக்களப்பு திருகோணமலை, வவுனியா, முல்லைத்தீவு போன்ற சகல மாவட்டங்களிலும் யாழ். அகற்றுச் சங்கங்களும் உருவாக்கப்பட்டன. இந்தச் சங்கங் களுக்குத் தலைமை வகித்தோர் அல்லது முன்னின்று நடத்தியவர்கள் பிறப்பால் யாழ்ப்பாணத்தவர்களே என சிலர் கூறுகின்றனர்.

எது எப்படியோ சிங்களக் குடியேற்றங்கள் தமிழ்ப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட போது தமிழர்கள் யாழ்ப்பாணத்தவர்களை வெளியேற்றுவதற்குச் சங்கம் அமைத்துச் செயற்பட்டனர்.

ஆனால், சிங்களவர்களை வெளியேற்றும் சங்கம் என்று எந்த ஒரு மாவட்டத்திலும் யாரும் சங்கம் அமைத்து செயற்பட்டதாகத் தெரியவில்லை. ஆங்காங்கே ஒரு சில தனி நபர்கள், அரசியல்வாதிகளின் எதிர்ப்பு நடவடிக்கைகளைத் தவிர, சுந்தரலிங்கம், கந்தப்போடி போன்ற ஒரு சில தனிநபர்களைத் தவிர, வேறு யாரும் சிங்கள குடியேற்றங்களை எதிர்த்ததாகத் தெரியவில்லை.

### பிரதேசவாதமும் அரசியலும்

இந்தப் பிரதேசவாதத்தை தமிழரசுக் கட்சியினர் தமது குறுகிய சுயலாப அரசியலுக்குப் பயன்படுத்தினர் என்பதே அழியாத குற்றச்சாட்டு. வவுனியாவில் ஸி.சுந்தரலிங்கத்தை வீழ்த்துவதற்காக த.சிவசிதம்பரத்தை சுந்தரலிங்கத்துக்கு எதிராகத் தேர்தலில் நிறுத்தி ''வன்னி மக்களின் வாக்கு வன்னியனுக்கே'' என்று பிரசாரம் செய்தனர்.

துப்பாக்கி முனையில் சிங்களவர்களைத் துரத்திய சுந்தரலிங்கத்தை வன்னி மக்களும் மறந்துவிட்டனர் தமிழரசுக் கட்சியினரும் மறந்து விட்டனர். ஸி.சுந்தரலிங்கம் தோற்கடிக்கப்பட்டார். த.சிவசிதம்பரம் வெற்றியீட்டினார்.

திருகோணமலை மாவட்டத்தில் யாழ் அகற்றுச் சங்கத் தலைவராக இருந்தவர் நவரட்ணராஜா. இவர் 'யாழ்ப்பாணி' களைத் திருமலையில் இருந்து வெளியேறக்கோரி ஊர்வலம் ஒன்றைக் கூட நடத்தினார். இவர் ஐக்கிய தேசி கட்சியின் அமைப்பாளராகவும் செயற்பட்டார். யாழ்ப்பாணிகளை வெளியேறச்சொல்லி ஊர்வலம் நடத்திய நவரட்ணராஜா சிறிமாபுரவில் தமிழர்களுக்கும் சில ஏக்கர் காணி தாருங்கள் என ஜே.ஆரிடம் ஊர்வலம் சென்றிருந் தால் திருமலையில் தமிழர்களின் சனத்தொகை ஓர் ஆயிரமாவது அதிகரித்திருக்கும்!

முல்லைத்தீவு மாவட்ட யாழ்.அகற்று சங்கத்தின் தலைவராக இருந்தவர் அண்மையில் யாழ். பல்கலைக்கழகத்தால் கௌரவிக்கப் பட்ட ஒருவர்.

வாழைச்சேனை காகித ஆலையில் ஈழநாடு பத்திரிகை ஸ்தாபகர் கே.சி. தங்கராஜா சிறிது காலம் தலைவராகப் பதவி வகித்தார். ஒரு ''யாழ்ப்பாணி'' காகித ஆலைத் தலைவராக பதவி வகிப்பதை மட்டக்களப்புத் தமிழ்ப் பிரதிநிதிகளால் சகிக்கமுடியவில்லை. தமது அரசியல் செல்வாக்கின் மூலம் கே.சி.தங்கராஜாவைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டு அவருக்குப் பதிலாக ஒரு சிங்களவரைப் பதவியில் அமர்த்தினர்.

### பிரதேசவாதத்தின் உச்ச அறுவடையே கருணா அணி

இந்தப்பிரதேசவாதத்தின் உச்ச அறுவடையே கருணா. நாடாளுமன்றத்தின் மூலம் செய்ய முடியாததை சட்டத்தின் மூலம் நிறைவேற்றிவிட்டது அரசு. இப்போது கருணாவை வைத்துக் கொண்டு கிழக்கில் தேர்தலை நடத்தி வடக்கையும் கிழக்கையும் சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் நிரந்தரமாகப்பிரித்து விட முயற்சிக் கிறது அரசு.

தேர்தல் என்று ஒன்று நடைபெற்றால் கருணாவும் முஸ்லிம்களும் வடக்கு கிழக்கு இணைப்பிற்கு எதிராகவே செயற்படுவர். மறுபுறத்தில் அரசாங்கத்துடன் இணைந்துள்ள ஈ.பி.டி.பி உட்பட சகல தமிழ் அரசியல் சக்திகளும் இணைந்த வடகிழக்கையே வலியுறுத்துவர்; இப்போதும் வலியுறுத்துகின்றனர்.

இணைந்திருந்த வடக்கையும் கிழக்கையும் சட்டத்தின் மூலம் தனித்தனியாகப் பிரித்துவிட்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, தமிழர்களுக்கு ஒரு தீர்வுத்திட்டத்தை முன்வைப்பார் என்று எந்த முட்டாளும் நம்பமாட்டான். ✱

## நாளை

| | |
|---|---|
| ஆனி - 25 | திங்கட்கிழமை 09.07.2007 |
| திதி : நவமி | காலை 06.50 |
| நட்சத்திரம் : | அச்சுவினி மு.ப. 11.22 |
| [illegible] | : 11.58 - 01.28 |
| ராகுகாலம் | : 07.28 - 08.58 |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அரச திணைக்களங்களுக்கு

# கப்பலில் எடுத்து வரப்பட்ட வாகனங்கள் நேற்றுக் கையளிப்பு

யாழ்.மாவட்ட அரச திணைக்களங்களின் பாவனைக்கென ஏழு வாகனங்கள் 'றுகுணு' கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ளன. இந்த வாகனங்களைக் கையளிக்கும் நிகழ்வு நேற்று தெல்லிப்பழையில் இடம்பெற்றது.

யாழ்.படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியிடம் இருந்து இந்த வாகனங்களை அரச அதிபர் கே.கணேஷ், யாழ்.பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

அரச அதிபரின் அலுவலகத்துக்கு வான் ஒன்றும் இரண்டு ''கப்'' வாகனங்களும்- சுகாதாரத் திணைக்களத்திற்கு இரண்டு ''அம்புலன்ஸ்'' வண்டிகளும் ''கப்'' வாகனம் ஒன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் கையளிக்கப்பட்டன.

அரசாங்கத்தால் தரப்படும் இந்த வாகனங்களை மிகவும் பொறுப்புடன் பாதுகாத்து பாவனையில் ஈடுபடுத்த வேண்டும். மேலும் இதே போன்ற வாகனங்கள் எதிர்காலத்தில் கிடைக்கும் என்று தளபதி சந்திரசிறி வாகனங்களைக் கையளித்து உரையாற்றுகையில் தெரிவித்ததாக பலாலி தலைமையகம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-1)

## அரசுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டமைப்பு மீது சவால்கள் சுமத்தப்படும் போதெல்லாம் அவற்றை ஒரு சாட்டாக எடுத்து தமிழ் மக்கள் மீதான இனச் சுத்திகரிப்பு நடவடிக்கையாக நடைமுறைப்படுத்துவது சிங்கள அரசின் இனவாத மரபாகும்.

**மீண்டும் செய்யத் தயங்காது**

உலக நாடுகளின் அழுத்தங்களுக்குப் பணிந்தே கொழும்பு வாழ் தமிழர்களின் வெளியேற்றத்தை சிங்கள அரசு விலக்கிக் கொண்டது. ஆயினும் மாற்று வழிகளில் தேவை ஏற்பட்டால் மீண்டும் இதே வழியில் தமிழர்களை இனச்சுத்திகரிப்புச் செய்ய சிங்கள அரசு தயங்காது. தேசிய பாதுகாப்பு என்று சிங்கள அரசு சொல்வதும் தமிழின அழிப்பையே குறித்து நிற்கின்றது.

இந்த வரலாற்று உண்மையை இலங்கை இனப்பிரச்சினையில் அக்கறையும் ஆர்வமுள்ள உலகநாடுகள் கவனத்தில் எடுத்து யதார்த்த பூர்வமாக சிந்திக்க வேண்டும். இதுவே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகும் - என்று 'விடுதலைப்புலிகள்' பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ரி)

## உள்ளூராட்சி சபைகளுக்கு சுகாதாரப் பரிசோதகர் நியமனம்

யாழ்ப்பாணம், ஜூலை 8

மாநகர சபைகள் மற்றும் நகர சபைகள் ஆகியவற்றில் வெற்றிடமாகவுள்ள பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பதவிகள் நிரப்பப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகள் சுகாதாரப் பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாநகர சபைகள், நகர சபைகள் ஆகியவற்றில் வெற்றிடமாகவுள்ள பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பதவிகள் தொடர்பான விவரங்களை அனுப்பி வைக்குமாறு அமைச்சின் செயலாளர் சம்பந்தப்பட்ட அலுவலகங்களைக் கடிதம் மூலம் கேட்டுள்ளார். (1-207)

## அமைதி முயற்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இத்தகவலை வெளியிட்டுள்ளது.

நோர்வேயின் ஒத்துழைப்போடு இந்த முயற்சியில் பிரிட்டன், ஜேர்மனி ஆகியன ஈடுபடலாம் என்றும் இதற்கான முன்முயற் சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள்மேலும் தெரிவித்துள்ளன.

இதுவரை காலமும் அனுசரணைப் பணி வகித்து வந்த நோர்வையை ஓரம் கட் டும் இந்த முயற்சிக்கு விடுதலைப் புலிகள் தரப்பில் சம்மதம் தெரிவிக்கப்படுமா என்ற சந்தேகம் எழுப்பப்பட்டிருக்கிறது.

விடுதலைப் புலிகள் மீது விதிக்கப்பட்டுள்ள தடையை ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் நீக்கினால் ஜேர்மன் - பிரிட்டன் அனுசரணைப்பணி சாத்தியமாகலாம் என்ற ஒரு கருத்தும் நிலவுகிறது.

ஆனால் எதனையும் ஊர்ஜிதம் செய்து உறுதிபடக் கூறமுடியாது என்பதும் கவனிக்கத்தக்கது. (அ-1)

## நோர்வே..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஹன்சன் போவர் இலங் கைக்கு வரவிருப்பதாக பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளை தாம் மறுப்பதாக ஜனாதிபதியிடம் பிரட்ஸ் கர் அப்போது தெரிவித்திருந்தார். (அ-1)

## கிழக்கில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

**இனப்பாகுபாடு ஒழிக்கப்படவேண்டும்**

அரசியல்வாதிகள் மீது வடக்கு, கிழக்கு மக்கள் அதிருப்தியடைந்துள்ளனர். வாக்குறுதிகளையும் ஒப்பந்தங்களையும் தூக்கி எறிகின்றவர்களாக அரசியல்வாதிகள் உள் ளனர்.

வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் மக்கள் மீதான இனப்பாகுபாடு ஒழிக்கப்பட வேண் டும்.

மஹிந்த அரசாங்கம் அமைத்திருக்கும் அனைத்துக் கட்சிக் குழுவினால்கூட இனப் பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தை முன் வைக்க முடியும் என்று நான் நினைக்க வில்லை. தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களினது அடிப்படை உரிமைகள் மதிக்கப்பட வேண்டும். அவர்களுக்கான அதிகாரப் பகிர்வு அளிக்கப்பட வேண்டும். அப்படிக் கூறுவதனால் நான் பிரிவினைவாதம் பேசு வதாகக் கருதக்கூடாது.

**மக்கள் கொடூர நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்**

ஆட்கடத்தல் சம்பவங்கள் என்பவை பணத்துக்காக மேற்கொள்ளப்படுகின்றன. இதில் ஆயுதம்தாங்கிய குழுக்களுக் குத் தொடர்பு உள்ளன. மக்களை உளவியல் ரீதியாக சித்திரவதை செய்கிற நோக்கத் துடனும் இத்தகைய கடத்தல் சம்பவங்கள் நிகழ்த்தப்படுகின்றன. சுதந்திரமாக நடக்கவோ பேசவோ பணி செய்யவோ முடியாத ஒருவித கொடூர நிலைக்கு மக்கள் தள்ளப் படுகின்றனர் - என்றார். (அ)

## அரசு, புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடையிலான மோதல்களைத் தவிர்ப்பதற்காக, தடுப்பதற்காக, மோதல்கள் அதிகரிக்காமல் பார்த்துக் கொள்வதற்காக நாம் இயன்றவரை நான்றாகப் பாடுபடு கின்றோம். எனினும் எங்களது பங்களிப்பு பெரிதும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது - என் றும் தொர்பினூர் ஓமர்சன் மேலும் தெரி வித்தார்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு வின் தலைவர் மேஜர் ஜெனரல் லார்ஸ் சொல்பேர்க்கும், ஓமர்சனும் கடந்த புதன் கிழமை கிளிநொச்சிக்குச் சென்று விடு தலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் நாயகம் எஸ்.புலித்தேவனையும் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையனையும் சந்தித்துப் பேசினர்.

போர்நிறுத்த ஒப்பந்தத்தை முழு அள வில் நடைமுறைப்படுத்துவதில் நமக்குள்ள அக்கறையையும் அர்ப்பணிப்பையும் அவர்கள் அப்போது வெளியிட்டனர்.

அதன்பின்னர் நேற்றுமுன்தினம் வெள் ளிக்கிழமை அரசாங்கத்தின் சமாதானப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி ரஜீவ விஜய சிங்கவை வழமையான வாராந்தக் கூட் டத்தில் சந்தித்தனர்.

அதன் பின்னரே கண்காணிப்புக் குழு வின் பேச்சாளர் எச்சரிக்கைத் தொனியில் முன்கண்ட கருத்துக்களைத் தெரிவித்தார்.

இதேவேளை, கண்காணிப்புக் குழுவி னர் விடுதலைப் புலிகளையும் அடிக்கடி கிரமமாகச் சந்தித்துப் பேச உள்ளதாக ஓமர்சன் தகவல் வெளியிட்டார். (அ)


மானிப்பாயில் முதன் முதலில்

பிரிவு - 2 ஆரம்பம்!!

ஒரு பிரிவில் 10 மாணவர்கள் மட்டும்.

(தூர இடங்களில் இருந்து வரும் மாணவர்களுக்கு விசேட வகுப்புக்களும் ஆரம்பம்!!)

வகுப்புக்கள்யாவும் 11.07.07 அன்று 12.30க்கு ஆரம்பம்.

Diploma in Mobile Phone Repairing

(சகல வகையான கைத்தொலை பேசிகளையும் மிகக் குறுகிய காலத்தில் நீங்களே திருத்துவதற்கான தொழில்சார் கற்கை நெறி)

மேலதிக விபரங்களுக்கு :-

UNi TECHNOLOGY

ICT Education Trainers

Manipay. T.P:- 0777-110862

(மானிப்பாய் பிரதேச சபைக்கு நேர் எதிரே)



துரித தபால்கள், பொதிகள் சேவை

உள்நாடு, வெளிநாடுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருள்கள், உணவுப்பொருள்கள், உடுபுடைவைகள் மற்றும் VDO பிரதிகள் CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.

திருமுருகன் கொம் நெற்

259, கே.கே.எஸ். வீதி, யாழ்பாணம். தொலைபேசி - 021 222 7835

46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி தொலைபேசி - 021 222 7310


## மரண அறிவித்தல்

### திருமதி பரமகுரு செல்லம்மா

மீசாலையைப் பிறப்பிடமாகவும் அல்லாரையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமகுரு செல்லம்மா நேற்று சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரமகுருவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பெரியராசா தம்பதியரின் அன்பு மகளும் அல்லாரையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான அமரசிங்கம் தம்பதியரின் பாசமிகு மருமகளும் அன்னலெட்சுமி, ராசலெட்சுமி, நாகராசா (சுவிஸ்), வேதநாயகி, பரமராசா (பிரான்ஸ்), நவநீதவல்லி, புஸ்பராணி ஆகியோரின் பாசமிகு தாயும் கணேசலிங்கம் (இளைப்பாறிய கிளை முகாமையாளர்), காலஞ்சென்ற கிருஷ்ணானந்தன் மற்றும் விமலாதேவி (சுவிஸ்), சாம்பசிவம், தங்கேஸ்வரி, பரமசிவம் (கிராம உத்தியோகத்தர், மீசாலை கிழக்கு), காலஞ்சென்ற யோகசுந்தரம் ஆகியோரின் அன்பு மாமியும் மீனலோஜினி (ஹொலன்ட்), மிர்னாளினி, பார்த்தீபன் (ஹொலன்ட்), இளந்திரையன் (நோர்வே), இளங்குமரன் (நோர்வே), துஷ்யந்தினி (ஜேர்மனி), ராஜகிருஷ்ணன் (இந்தியா), சாமினி (இந்தியா), சிறிதரன் (கனடா), தர்சினி (சுவிஸ்), நரேஸ் (சுவிஸ்), ரூபனா (சுவிஸ்), காலஞ்சென்ற காண்டீபன் மற்றும் வக்சலா, சாரங்கன், தர்ஷா, சிவசுதன், (ஆசிரியர், மட்டக்களப்பு), சிவாஜினி (விவசாயபீடம், யாழ்.), சிவநந்தினி (லண்டன்), சிவநிருபன், செந்தூரன் (லண்டன்), பிரதீபா, கஜீபன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.07.2007) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கொற்புலவு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

அல்லாரை வடக்கு கொடிகாமம். மருமக்கள் - க.கணேசலிங்கம், செ.சாம்பசிவம், நா.பரமலிங்கம் (G.S.)


A/L 2008

இன்று ஆரம்பம்

திரு. வின்சன் (B.B.A.Spl)

இலங்கை கணக்கீட்டு நியமம்

கணக்கீடு

நாவலர் வீதி, யாழ்.



விற்பனைக்கு

Pentium 4 கணனி (1.8GHz, 256MB Ram, 40GB Hard Disk) மற்றும் Toshiba Laptop, Joy Stick, Euro Star Receiver என்பன உடன் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு : 077 6544709



விற்பனைக்கு

10 அடி Koren தயாரிப்பு டிஸ் அன்ரனா மட்டும் விற்பனைக்குண்டு. றிசிவர் இல்லை. சனி, ஞாயிறு பி.ப. 3- 6 மட்டும். 396, நாவலர் வீதி, கைலாயபிள்ளையார் கோயிலடி, உதயன் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.



OFFERED PRICE

Apple IPOD 1 GB Mp4 Player 7750/-

LGA AsRock 6500/- Asus 8900/-

Intel Original 13900/-,17900/-

478AsRock 7900/- IBM 11000/-

Intel Processors Ghz 2.6,2.8,3.0/2m

Dual Core 3.0/4m & Core 2 Duo

Monitors

LCD IBM 26000/-, ViewSonic 17" Wide 29000/-

CRT ViewSonic 15" 15600/-, Intex 15" 14250/-

Optical Drives

CDROM 2500/-, COMBO 4500/-

DVD Writter 5750/-

Keyboard/Speaker 800/-

Mouse Optical PS2 550/- USB 650/-

UPS 600/650 VA 6500/-

Printers

HP 7250/- HP Laser 19000/- Onwards

Toners 12A,13A,15A,49A,92& all

Canon Lide 25 Scanner 8250/-

ATX LGA Casing 4800/- Onwards

Internal & External TV Tuners

IEEE1394 Dv3 Capture Card

Woofers 2.1,4.1 & 5.1

HDD, CDD External USB Enclosure

HDD Heat Sink & Cooling Fan Kit

11/07/2007 வரை

புதிய P4 ரக கணினி புதிய மொனிற்றருடன்

Hurry!! 43,999/-

More offer Systems @ 49,900/-, 97500/- & 149,500/-

மற்றும் சலுகைகளுக்கும் தெரிவுகளுக்கும் நேரில்

எங்களுக்கு வேறு கிளைகள் யாழில் கிடையாது

UNIT

மனோகரா தியேட்டர் சந்தி

347,K.K.S Road,Jaffna

021-4590720



உங்களின் பெறுமதியான பொருட்களுக்குப் பாதுகாப்பு....

செலவுக்குத் தேவையான பணம்....

செலான் தங்க நகை அடகுச் சேவை...

ஒரு பவுனுக்கு 15,100/-

* முத்திரை வரி வங்கியினால் செலுத்தப்படும்

* அடகு நகையை விரைவாகத் திருப்பலாம்

* இரகசிய உத்தரவாதம்

* பகுதிக் கொடுப்பனவு வசதி

* குறைந்த வட்டிக்கு அதிக முதல்

செலான் வங்கி - யாழ்ப்பாணக் கிளை

இல.560&562, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

செலான் வங்கி

கொடுக்கல் வாங்கல் நேரம் : வார நாள்களில் காலை 9 மணிமுதல் பிற்பகல் ஒரு மணிவரை

: சனிக்கிழமைகளில் காலை 9 மணிமுதல் மதியம் 12 மணிவரை

தொலைபேசி இல.: 021 222 3047, 222 3755


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.07.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.